மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 4 • அக்டோபர் 2023 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# மேன்மக்கள்

## சிறப்பிதழ்


FLOAT IN SHADES
RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS & SHIRTS
Available at Ramraj Cotton Showrooms
and all leading textile shops
Shop online @ www.ramrajcotton.in


மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்
எந்தச் சூழலிலும் நெறி தவறாமல் வாழ்ந்து
எல்லோருக்கும் உதாரணமாக இருக்கும்
மதிப்பிற்குரிய மனிதர்களைப் பின்பற்றி
வாழ்வில் மேன்மை பெற வழிகாட்டும்
மேன்மக்கள்
சிறப்பிதழ்
என்ற இந்தப் பயனுள்ள நூலை
வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்.

நமது மகிழ்ச்சியைப் பிறர் தீர்மானிக்க அனுமதிக்காமல், எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்கும் முன்னுதாரண மனிதர்களை 'மேன்மக்கள்' என்பர். இருளும் ஒளியும் நிறைந்த வாழ்வில் எந்தச் சூழலிலும் 'குறையொன்றுமில்லை' என்று அவர்கள் நிறைவாழ்வு வாழ்வார்கள். தங்களின் நிலை தாழ்ந்து போகும் சூழலிலும் பிறருக்குக் கெடுதல் வராமல் பார்த்துக்கொள்வர். சுடச்சுட ஒளிரும் பொன்போல எந்த இடரிலும் தங்களின் முகத்தில் மகிழ்ச்சியைக் கொண்டுவருகிற மந்திரசக்தி அவர்களிடம் இருக்கும்.

வரலாற்றிலும் இலக்கியத்திலும் மட்டுமின்றி, நம் அன்றாட வாழ்விலும் இத்தகைய மேன்மக்களைத் தரிசிக்க முடியும் என்பதை ஆட்டோ ஓட்டும் ஒரு முதியவர் பற்றி அறிந்தபோது உணர முடிந்தது.

இரவு 11 மணிக்கு மேல் ஒருவர் பயணிக்க, ஆட்டோவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். நான்கு மடங்கு கட்டணத்தைப் பலர் கேட்க, சரியான கட்டணம் கேட்கும் ஒரு ஆட்டோ ஓட்டுநருக்காகப் பயணி காத்திருக்கிறார். நள்ளிரவை நெருங்க நெருங்கக் கட்டணம் உயர்ந்துகொண்டே போகிறது. அடுத்து வருகிற வண்டியில், கேட்கிற கட்டணத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடலாம் என அவர் நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் 70 வயதை நெருங்கும் ஒரு முதியவர் ஆட்டோ ஓட்டி வந்திருக்கிறார்.

போக வேண்டிய இடத்தைச் சொன்னபோது, 'மீட்டர் போடுகிறேன். இரவு நேரம் என்பதால் ஒன்னரை மடங்கு கட்டணம் கொடுங்கள்' என இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கிறார். தன் தாத்தா வயதில் இருக்கும் ஒரு மனிதர் இரவில் ஆட்டோ ஓட்டி உழைக்கிறார் என்பதும், நியாயமான கட்டணம் கேட்கிறார் என்பதும் பயணியை ஆச்சர்யப்படுத்தியது. முதியவரிடம் பேச்சுக்கொடுக்கிறார்.

ஒரு முதியவருக்கும் இளைஞருக்கும் நடைபெற்ற அந்த உரையாடல்தான் மேன்மை நிறைந்த எளிய மனிதரை நமக்கு அடையாளப்படுத்தியது. "இந்த வயதில் இரவில் ஏன் வேலை செய்கிறீர்கள்? பலரும் மூன்று மடங்கு கட்டணம் கேட்கும் நேரத்தில், நீங்கள் நியாயமான கட்டணம் போதும் என்று எப்படி நினைக்கிறீர்கள்?" எனக் கேட்கிறார் பயணி.

"46 வருஷமா ஆட்டோ ஓட்டறேன். கல்யாணமாகி 18 வருஷம் கழிச்சி வரம் மாதிரி ஒரு மகன் பொறந்தான். ஆட்டோ ஓட்டிக் கஷ்டப்பட்டுதான் படிக்க வெச்சேன். அவனும் நல்லா படிச்சி, நல்ல வேலைக்குப் போனான். அவனுக்கு விருப்பமான பெண்ணைத் திருமணம் செய்து வெச்சோம். எனக்கும் என் மனைவிக்கும், மகன், மருமகள், பேரக்குழந்தைகளோட வயசான காலத்துல சந்தோஷமா இருக்கணும்னு எதிர்பார்ப்பு இருந்துச்சு.

ஆனா, மருமகளுக்கு எங்களோட சேர்ந்து வாழ இஷ்டமில்ல. பெத்தவங்களையும் கட்டினவளையும் ஒரே இடத்துல வெச்சி சமாளிக்க முடியாம மகன் தடுமாறித் தத்தளிக்கிறத பாக்கமுடியல. தவம் இருந்து பெத்து ஆசை ஆசையா வளர்த்த மகன் சந்தோஷமா இருக்க நாம காரணமா இருக்கலாம், கஷ்டப்பட நாம காரணமா இருந்துடக்கூடாது இல்லையா? கஷ்டப்பட்டு ஆளாக்கின பெத்தவங்களை வயசான காலத்துல தனியா விட்டுட்டுப் போக மகனுக்கு மனசு இல்லதான். 'நாங்க வாழ்ந்து முடிச்சவங்க. முன்ன பின்ன இருந்தா அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு காலத்த ஓட்டலாம். நீங்க தனியா போய் இருங்க'ன்னு சொல்லிட்டோம்.

கொஞ்ச நாள்ல என் மனைவி உடம்புக்கு முடியாம போச்சு. ரொம்பக் கஷ்டப்பட்டுட்டா. நான் விழுந்தப்பல்லாம் தாங்கிப் புடிச்ச கையும், காலும் விழுந்துருச்சி. இனிமே அத பாத்துக்கிறது என் கடமைதானே! அதுக்குதானே கடவுள் என் கையையும், காலையும் நல்லா வெச்சிருக்கான். அதான் பகல் முழுக்க மனைவிய பாத்துக்கிற பொறுப்பு. ராத்திரி சாப்பிட்டு மாத்திர போட்டு அவ தூங்கின அப்புறம் வண்டிய எடுப்பேன். உழைச்சி சம்பாரிச்ச வண்டி. இது நம்மகூட இருக்கிறப்ப யானை பலம் வந்துடும். ஆஹா ஓஹோன்னு இல்லன்னாலும், இருக்க இடமும், போட துணியும், பசிக்குச் சோறும் இந்த வண்டி போட்டுரும்.

600 ரூபா கிடைச்சா அதோட அந்த நாள் வண்டி ஓட்டுறத நிறுத்திட்டு வீட்டுக்குப் போயிருவேன். எங்க ரெண்டு பேருக்கும் அவ்ளோ பணம் போதும். சில நாட்கள்ல 300, 400 கிடைக்கிறதே பெருசா இருக்கும். காலையில அவளுக்கு எழுப்பி மருந்து குடுக்கிற நேரம் வரைக்கும்தான் வண்டி ஓடும். 'ஆண்டவன் இன்னைக்கு இவ்ளோதான் படி அளந்திருக்கான். நாளைக்கு பத்தி இன்னைக்கே எதுக்கு யோசிக்கணும்'னு கிடைக்கிற



பணத்தோடு வீட்டுக்குப் போயிடுவேன்" எனச் சிரித்த அந்தப் பெரியவர், தன் வாழ்வின் நெருக்கடிகளைக் கடந்து எப்படிச் சிரிக்கிறார் என்கிற ஆச்சர்யத்தோடு வியந்து பார்க்கிறார் பயணி.

''உங்க பையன் உங்களுக்குப் பண உதவி பண்றதில்லையா?'' எனக் கேட்டதற்கு, "குடுத்தாலும் குடுக்கலன்னாலும் மகன் என்னைக்குமே எங்களுக்கு மவராசன்தான். கோயில் கோயிலா வேண்டிப் பெத்த புள்ள அது. பொறந்தப்ப அவனைக் கையில வாங்கும்போது, 'கடவுளே, இந்தக் குழந்தைக்கு எந்தக் கஷ்டமும் வராம சந்தோஷமா வாழணும். அவனுக்கு வர்ற கஷ்டத்தையும் எனக்குக் குடுத்துரு'ன்னு வேண்டி இருக்கேன். ஏதோ வாழ்க்கை சூழ்நிலையாலப் பெத்தவங்களப் பாத்துக்க முடியாம போச்சின்னா திட்டமுடியுமா? நாங்க வேணும்னு வேண்டி புள்ளையப் பெத்துகிட்டோம். எங்களுக்குப் புடிச்சிதான் சீராட்டி வளர்த்தோம். அவன் சந்தோஷம் எங்க சந்தோஷம்னு வாழ்ந்தோம். இதையெல்லாம் எங்க மனநிம்மதிக்காகத்தான் செஞ்சோம். இப்போ வளர்ந்ததும் 'நாங்க உங்களுக்கு இதெல்லாம் பண்ணோம். நீயும் எங்களுக்கு இதெல்லாம் பண்ணணும்'னு எதிர்பார்க்கிறது நல்லாவா இருக்கு? இந்த வயசுலயும் உழைக்கிற தெம்ப குடுத்த கடவுளுக்கு நன்றி சொல்லிட்டு, இருக்கிற காலத்த நிம்மதியா ஓட்டினா அது போதாதா? இன்னும் என்ன வேணும்?" என்று அதே புன்னகையைப் பரிசளித்த முதியவரின் மேன்மைக் குணத்தைப் பகிர்ந்திருந்தார் அந்தப் பயணி.

வரலாற்றில் இடம்பெறும் சாதனை இல்லைதான். ஆனால், எந்த நெருக்கடியையும் பிரச்னையாகப் பார்க்காமல் வாய்ப்பாக மாற்றுகிற அந்தப் போர்க்குணமும், பிறரை நம்பி இல்லாமல் உழைத்து வாழ்வதில் அடைகிற பெருமிதமும் வியப்பைத் தரக்கூடியவை. அனைவரும் பின்பற்ற வேண்டியவை. மாதம் 10 ஆயிரம் ரூபாய்கூடச் சம்பாதிக்காத தூய்மைப் பணியாளர், சாலையில் கிடந்த பல லட்சம் பணத்தைக் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்... வண்டியில் தவறவிட்ட நகைகளை உரியவர்களைத் தேடி ஒப்படைத்த பேருந்து ஓட்டுநர்... போன்ற செய்திகளைப் படிக்கும்போது அந்த மேன்மக்களை வணங்கத் தோன்றும். மனித குலம் அறத்தின் மீது நம்பிக்கை கொள்ளத் தங்களைத் தூதுவர்களாக மாற்றிக்கொண்டவர்கள் அவர்கள்.

தனக்குப் பொருளாதாரத் தேவை இருந்தாலும் அந்த நள்ளிரவுப் பயணத்திற்கு நியாயமான கட்டணம் வசூலிக்கும் பண்புதான் அந்த முதியவரின் மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் அடிப்படை. சிறந்த தந்தையாக, சிறந்த கணவராக, வாடிக்கையாளருக்கு உண்மையாக இருக்கும் சிறந்த உழைப்பாளியாக, எல்லாக் கோணத்திலும் மேன்மை மிகுந்த வாழ்வில் மகிழ்ச்சிக்கு எப்படிக் குறை வரும்?

பிறர்நலம் போற்றுகிற இத்தகைய மேன்மக்கள் தங்கள் நலத்தையும் சிறப்பாகக் கவனித்துக் கொள்வார்கள். இவர்களைப் போன்றோரின் அருகில் நாம் இருந்தால், இவர்களின் எண்ண வெளிச்சம் நம் வாழ்விற்கும் ஒளி தரும். இருளை எதிர்த்து நிமிர்ந்து எரியும் சுடர்போன்ற மேன்மக்களைப் போற்றி, நமக்கு வழிகாட்டும் அவர்களின் பண்புநலன்களைப் பின்பற்றி நிறைவாழ்வு வாழ்வோம்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

# மேன்மையான மனிதராக மாறுங்கள்!

'இதயத்தைத் திறந்து காட்டவா' என்றெல்லாம் சிலர் வேடிக்கையாகக் கேட்பார்கள். 'என் இதயத்தில் நீதான் இருக்கிறாய்' என்று காட்டுவதற்காக இப்படி மனம் உருகிச் சொல்வார்கள். உண்மையில் யாரும் அப்படியெல்லாம் இதயத்தைத் திறந்து காட்ட முடியாது. அப்படிக் காட்ட முடிந்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனையில் உருவான கதை இது.

ஒரு கிராமத்தில் துடுக்கான இளைஞன் ஒருவன் இருந்தான். அழகும் ஆரோக்கியமும் நிரம்பிய அவனிடம் எந்தக் கெட்ட பழக்கங்களும் கிடையாது. தினமும் முறையாக உடற்பயிற்சிகள் செய்து, கடுமையாகவும் உழைத்து உடலை உறுதியாக வைத்திருந்தான்.

கிராமத்தில் ஒருநாள் திருவிழா நடந்தபோது ஊரே கூடியிருந்தது. அப்போது அந்த இளைஞன் ஆர்ப்பாட்டமாகக் கூட்டத்துக்கு நடுவில் வந்து நின்றான். "இந்தப் பகுதியிலேயே மிக அழகான இதயம் எனக்குத்தான் உள்ளது" என்று பெருமையுடன் சொன்னான். இதயத்தைத் திறந்தும் காட்டினான். அது மென்மையாக, பளபளப்பாக இருந்தது. சிவந்த நிறத்தில் இருந்த அது, மிக அழகாகத் துடித்தது. கூடியிருந்த எல்லோருமே, "ஆமாம், உன் இதயம் மிக அழகானது" என்று பாராட்டினார்கள்.

அப்போது கூட்டத்திலிருந்து முதியவர் ஒருவர், "இல்லை, என் இதயம் அளவுக்கு உன்னுடையது அழகாக இருக்க வாய்ப்பில்லை'' என்றார். இளைஞனுக்குக் கோபம் வந்தது. "எங்கே, அந்த அழகான இதயத்தைக் காட்டுங்கள்" என்றான். முதியவர் கூட்டத்துக்கு நடுவே வந்து தன் இதயத்தைத் திறந்து காட்டினார். அது ஆரோக்கியமாக இருந்தாலும், நன்றாகத் துடித்தாலும், அழகாக இல்லை. கிழிந்த துணியை வெவ்வேறு நிறத் துணிகள் வைத்துத் தைத்து ஒட்டுப் போட்டது மாதிரி ஆங்காங்கே வெவ்வேறு நிறங்களில் துண்டுகளை ஒட்டுப் போட்டது போல இருந்தது. சில இடங்களில் பள்ளங்கள் இருந்தன. இயல்பான வடிவத்திலேயே அது இல்லை.

கூட்டம் சிரித்தது. இளைஞனும் சிரித்தான். "இதைப் போய் அழகான இதயம் என்கிறாயே தாத்தா" என்றான்.

முதியவர் பெருமூச்சு விட்டபடிச் சொன்னார். "என் இதயமும் உன் இதயத்தைப் போலப் பளபளப்பாகவும் மென்மையாகவும்தான் இளமையில் இருந்தது. ஆனால், உண்மையான அழகை நான் தாமதமாகவே புரிந்துகொண்டேன். அதன்பின் நான் நேசிக்கும் நிறைய பேருக்கு இதயப்பூர்வமாக உதவிகள் செய்தேன். அன்பைக் கொடுத்தேன். அறிமுகம் இல்லாதவர்களுக்கும் என்னால் முடிந்ததைச் செய்தேன். பிரதிபலன் எதிர்பார்க்காமல் நான் அன்பு காட்டினாலும், அவர்களில் பலர் என் மீதும் அன்பாக இருக்கிறார்கள். அப்படி என் இதயத்தைக் கொடுத்து, பதிலுக்கு அவர்களின் இதயத்தை வாங்கி ஒட்டுப் போட்டதால்தான் என் இதயத்தின் வடிவம் மாறிவிட்டது.

சிலருக்கு நான் அன்பாக எவ்வளவோ செய்தாலும், அவர்களிடமிருந்து எனக்கு அன்பு கிடைப்பதில்லை. அதனால்தான் என் இதயத்தில் ஆங்காங்கே பள்ளங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளங்களைப் பார்க்கும்போது வேதனை எழுந்தாலும், நான் நிறைய பேருக்கு என் அன்பைப் பகிர்ந்திருக்கிறேன் என்ற நிறைவு கிடைக்கிறது. அதனால்தான் நான் உதவிகள் செய்வதையும் அன்பு



காட்டுவதையும் நிறுத்துவதே இல்லை" என்று முதியவர் சொல்லி முடித்தபோது கூட்டம் அமைதியானது.

அந்த இளைஞன் கண்ணீருடன் அவரை நெருங்கி அரவணைத்து, "இந்த உலகிலேயே அழகான இதயம் உங்களுடையதுதான் தாத்தா" என்றான். பிறகு தன் இதயத்திலிருந்து ஒரு துண்டை எடுத்து, நடுங்கும் கரங்களால் அந்த முதியவரின் இதயத்தில் ஒட்டினான். பதிலுக்கு அவரும் தன் இதயத்திலிருந்து ஒரு துண்டை எடுத்து அவனுக்குப் பொருத்தினார். "இப்போதுதான் என் இதயம் அழகாக மாற ஆரம்பித்திருக்கிறது" என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் விடைபெற்றான்.



கற்பனை என்றாலும் இந்தக் கதை உணர்த்தும் நீதி, எல்லோருக்கும் உதவிகரமாகவும் அன்பாகவும் இருந்து மேன்மை பெற வேண்டும் என்பதே! மேன்மையான மனிதராக மாறுவதற்கு இதையெல்லாம் செய்யுங்கள்...

● கோபத்தையும் பழிவாங்கும் உணர்வையும் மனதிலிருந்து துரத்துங்கள். உங்களுக்குத் தவறு இழைப்பவர்களை மன்னிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதற்காக, உங்களை அவமானப்படுத்தும் மனிதர்களைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. அவர்களிடமிருந்து விலகி வாருங்கள், அந்த எதிர்மறை உணர்வைத் துரத்திவிடுங்கள். அது உங்களை மேன்மையான மனிதராக மாற்றும்.

● மன்னிப்பது போலவே, நீங்கள் தவறு செய்தால் மன்னிப்புக் கேட்கவும் தயங்காதீர்கள். வேலை, தொழில், வியாபாரம் என்று எந்த இடத்திலும் இதைப் பின்பற்றுங்கள். உறவுகள் மற்றும் நண்பர்கள் மத்தியிலும் இதைச் செய்ய மறக்காதீர்கள். மன்னிப்பு கேட்கும்போதே, "இனி இப்படி தவறு நிகழாது" என்று உறுதிமொழியும் கொடுங்கள். உங்கள் வாழ்வில் குறுக்கிடும் அத்தனை மனிதர்களும் உங்களை மதிப்பார்கள்.

● நாம் செய்யும் தவறுகளைவிட, அடுத்தவர்கள் செய்யும் தவறுகளே நம் கண்களில் அதிகம் படும். உண்மையைப் பேசுகிறேன் பேர்வழி என்று, அந்தத் தவறுகளைக் கடுமையான வார்த்தைகளால் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்யாதீர்கள். ஒருவரிடம் குறைகளைக் கண்டால், அவராகக் கேட்டால் மட்டுமே மென்மையான வார்த்தைகளால் அதைச் சுட்டிக் காட்டுங்கள். நெருங்கிய நண்பர்கள், உறவுகளிடம் வேண்டுமானால் உரிமை எடுத்துக்கொண்டு விமர்சனம் செய்யலாம். அப்போதும் கண்ணியம் தவறக்கூடாது. முக்கியமான விஷயம், யாரைப் பற்றியும் தவறான விஷயங்களை முதுகுக்குப் பின்னால் பேசக்கூடாது.

● எல்லோரிடமும் இனிமையாகப் பேசுங்கள். முகம் தெரியாதவர்களிடம்கூடக் கனிவுடன் நடந்துகொள்ளுங்கள். 'ப்ளீஸ்', 'சாரி', 'நன்றி' போன்ற வார்த்தைகளை அதிகம் பயன்படுத்துங்கள். இப்படிப் பணிவாக நடப்பதால் நீங்கள் ஒன்றும் குறைந்துபோய் விடுவதில்லை.

● உதவி கேட்பவர்களுக்குத் தயக்கமின்றி உதவுங்கள். உதவி கேட்காத மனிதர்களுக்கும் உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள். தன்மானம் கருதி நிறைய பேர் கேட்கத் தயங்குவார்கள். சுற்றி வளைத்து அவர்கள் பேசுவதிலிருந்து அவர்களின் தேவையை உணர்ந்து நிறைவேற்றுங்கள்.

● நல்ல நோக்கத்துடன் பல சேவை நிறுவனங்கள், பொதுநல அமைப்புகள் இயங்கிவருகின்றன. பணமோ,



பொருளோ, உடல் உழைப்போ, அவர்களுக்குக் கொடுங்கள். மருத்துவ உதவி தேவைப்படும் ஒருவருக்குப் பணம் கொடுக்கலாம்; ஆதரவற்றோர் இல்லத்துக்கு உணவோ, உடைகளோ கொடுக்கலாம். உங்கள் பகுதியைச் சுத்தம் செய்யும் குழுவினருடம் நேரம் இருக்கும்போது இணைந்து தூய்மைப்பணி செய்யலாம், மரக்கன்று நடலாம். சமூகத்துக்காகச் செய்யும் செயல்களே உங்களை மேன்மை நிலையை அடைய வைக்கின்றன. ●



## நான் யார் தெரியுமா?

ரோஜர் ஃபெடரர், மகத்தான சாதனைகள் செய்த டென்னிஸ் வீரர். 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற மிகப்பெரிய சாதனையாளர். சமீபத்தில் ஓய்வுபெற்ற அவரைத் தெரியாதவர்கள் டென்னிஸ் உலகில் இருக்க முடியாது. அவர் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம்...

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் விளையாட அவர் சென்றிருந்தார். மைதானத்தில் பயிற்சியை முடித்துக்கொண்டு, உள்ளே இருக்கும் லாக்கர் அறையில் பொருட்களை வைத்துவிட்டு உடையை மாற்றிக்கொண்டு வருவதற்காக அவர் போனார். ஆனால், அங்கிருந்த காவலர் அவரை உள்ளேவிட மறுத்துவிட்டார். காரணம், வீரர்களுக்காக வழங்கப்படும் அடையாள அட்டையைக் கொண்டுவர ரோஜர் ஃபெடரர்

## பொறுப்பை உணர்த்த வேண்டும்!

தாமஸ் ஆல்வா எடிசன் உலகிலேயே முதன்முறையாக, புதுமை முயற்சியாக மின்சாரத்தில் ஒளிரும் பல்பை கண்டுபிடித்தார். தன் நண்பர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அந்த பல்பை ஒளிர வைத்துக் காட்டுவதற்காக ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். அவரது ஆராய்ச்சிக்கூடத்தின் மேல் தளத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. எடிசன் தனது உதவியாளரை அந்த மின்சார பல்பை மேல் தளத்திற்குக் கொண்டு வரச் சொன்னார். அவர் கொண்டுவரும்போது பல்பு கை தவறிக் கீழே விழுந்து உடைந்துவிட்டது. அங்கிருந்த எல்லோரும் அதிர்ச்சி அடைந்தார்கள். உதவியாளருக்குப் பயத்தில் வியர்த்தது.

ஆனால், எடிசன் பதற்றம் அடையவில்லை. சில நாட்களிலேயே மீண்டும் ஒரு மின்சார பல்பை உருவாக்கினார். மீண்டும் சந்திப்பு நடத்தி, அதே உதவியாளரையே பல்பை மேலே கொண்டு வரச்செய்தார். “பல்பைக் கீழே போட்டு உடைத்த அவரிடமே அதை மீண்டும் கொடுக்கிறீர்களே?” என்று சிலர் ஆச்சரியப்பட்டு எடிசனிடம் கேட்டார்கள். “அந்த பல்ப் மீண்டும் உடைந்தாலும் என்னால் இன்னொரு பல்பை உருவாக்க முடியும். ஆனால், ஒரு மனிதரின் மனதை உடைத்துவிட்டால் அதை என்னால் சரிசெய்ய முடியாது. அதனால்தான் மீண்டும் அவரிடமே அந்தப் பணியைக் கொடுத்தேன். அவர் தனது பொறுப்பை உணர்ந்து நன்றாக வேலை செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது” என்றார் எடிசன்.

அப்போதுதான் எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த அந்தப் பொறுமையின் முக்கியத்துவத்தையும், அவர் மனிதர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் அனைவரும் உணர்ந்தார்கள்.



## மதிப்பு இருக்கிறது!

கிராமத்தில் ஒருவர் வேட்டை நாயை வளர்த்து வந்தார். ஊருக்கு வெளியே தனியாக இருக்கும் தோட்டத்திலேயே அவர் வீடு இருக்கிறது. வீட்டைக் காவல் புரிவது வேட்டை நாயின் பணி. மோசமான திருடர்கள்கூட அந்த நாய் குரைத்தபடி அசுரப் பாய்ச்சலில் ஓடிவருவதைப் பார்த்தால் தலைதெறிக்க ஓடிவிடுவார்கள். அது குரைத்தால், ஊருக்கே கேட்கும்.

ஒருநாள் அந்த வேட்டை நாய் தன் குட்டிகளுடன் ஊருக்குள் நடந்து வந்தது. அதன் எஜமானர் கோயிலுக்கு வந்ததால், அவருடன் அவை வந்தன. அப்போது, தெருவில் சுற்றிக் கொண்டிருந்த சாதாரண தெருநாய்கள் வேட்டை நாயையும் அதன் குட்டிகளையும் பார்த்துக் குரைத்தன. வேட்டை நாய் அதைக் காதில் வாங்காதது போல அமைதியாக நடந்தது.

குட்டி நாய்களுக்குக் கோபம் வந்தது. “அம்மா, யாராவது திருடர்கள்

மறந்திருந்தார். அந்த அட்டை இல்லாமல் உள்ளே போக முடியாது.

ரோஜர் ஃபெடரர் கோபம் அடையவில்லை. 'நான் யார் தெரியுமா? என்னையே தடுக்கிறாயா?' என்று கத்திக் கூப்பாடு போடவும் இல்லை. "சாரி, என் மீதுதான் தவறு" என்று சொல்லிவிட்டு, மைதானத்தில் இருந்த தன் உதவியாளர்களை அடையாள அட்டையைக் கொண்டுவருமாறு கேட்டு, அதன்பிறகே உள்ளே போனார்.

எங்காவது காவலர்கள் வாகனத்தை நிறுத்தி 'லைசென்ஸ் இருக்கா?' என்று கேட்டாலோ, கூட்ட நெரிசல் மிகுந்த ஆலயம் ஒன்றில் வரிசையை மீறிச் செல்லும்போது தடுக்கப்பட்டாலோ, "நான் யார் தெரியுமா?" என்று அதிகாரம் செய்பவர்கள் தங்களை உயர்வான மனிதர்களாகக் கருதிக்கொள்கிறார்கள். உண்மையில் அவர்களிடம் எந்த மேன்மையும் இல்லை.



ஆயுதங்களுடன் வந்தாலே அவர்களைக் கடுமையாகக் குரைத்து விரட்டுவாய். இந்தச் சாதாரண நாய்கள் நம்மைப் பார்த்து ஏளனம் செய்து குரைக்கின்றன. அமைதியாக வருகிறாயே? அந்த நாய்களைக் கடித்துக் குதற வேண்டாமா?" என்று கேட்டன. வேட்டை நாய் அமைதியாக, "இவை பயத்திலும் குழப்பத்திலும் நம்மைப் பார்த்துக் குரைக்கின்றன. இதைக் கண்டுகொள்ளாமல் விட வேண்டும். இந்த நாய்களுடன் சண்டை போடுவது நம் வேலை கிடையாது. நமக்குக் காவல் காப்பதுதான் முக்கியமான வேலை. வேட்டை நாய்களான நமக்கு உயர்ந்த மதிப்பு இருக்கிறது. மதிப்பான எதிரிகளுடன்தான் நாம் மோத வேண்டும். இவற்றை ஒன்றும் செய்யக்கூடாது" என்று பதில் சொன்னது. மதிப்பை உணர்ந்தால் மேன்மை பெறலாம்.

# செயலில் இருக்கிறது மதிப்பு!

தையல் கலைஞர் ஒருவர் தனது கடையில் துணிகளைத் தைத்துக்கொண்டிருந்தார். அவர் மகன் அருகில் அமர்ந்து, அவர் செய்யும் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தையல்காரர் ஒரு புதுத் துணியை எடுத்தார். அதை அழகிய பளபளக்கும் கத்தரிக்கோலால் துண்டுகளாக வெட்டினார். பின்னர் கத்தரிக்கோலைத் தன் கால் அருகே போட்டுவிட்டுத் துணியைத் தைக்கலானார். தைத்து முடித்ததும் சிறிய ஊசியை எடுத்துத் தனது தலையில் இருந்த தொப்பியில் குத்திப் பத்திரப்படுத்தினார்.

மகனுக்குச் சந்தேகம் வந்தது. ''அப்பா, கத்தரிக்கோல் விலை உயர்ந்தது, அழகானது. அபூர்வமாகச் சில கடைகளில் மட்டுமே கிடைக்கும். அதை அலட்சியமாகக் காலடியில் போடுகிறீர்கள். ஊசி சிறியது, விலை மலிவானது, எங்கும் கிடைக்கிறது. ஆனால், அதைத் தலையில் வைத்துப் பாதுகாக்கிறீர்களே. ஏன்?" என்று கேட்டான்.

"நீ சொல்வது உண்மைதான். கத்தரிக்கோல் அழகாகவும் மதிப்புள்ளதாகவும் இருந்தாலும், அதன் செயல் வெட்டுவது. அதாவது பிரிப்பது! ஆனால், ஊசி சிறிதாகவும், மலிவானதாகவும் இருந்தாலும் அதன் செயல் சேர்ப்பது. வெட்டுப்பட்ட துணிகளை அதுதான் கோர்க்கிறது. ஒருவரின் மதிப்பு அவருடைய செயலைக்கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. அவர் உருவத்தை வைத்து அல்ல" என்று வாழ்க்கைத் தத்துவம் சொன்னார் அப்பா. நல்லதையே செய்வோம், நல்லவர்களாக வாழ்வோம்.





# தருவதும் இன்பம்... பகிர்வதும் இன்பம்...

தானத்தை ரகசியமாக வைக்க வேண்டும் என்பார்கள். ‘அடுத்தவர்களுக்கு உதவி செய்கிறபோது, வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது’ என்கிறது பழமொழி. தானத்தில் அது முக்கியம். ‘இவனுக்கு நான் தானம் செய்கிறேன்’ என்ற கர்வத்தோடு ஒருவர் செய்தால், அங்கு வாங்குகிறவர் நொறுங்கிப் போகிறார். ‘கையேந்தும் நிலைக்கு ஆகிவிட்டோமே’ எனத் தலைகுனிகிறார். கொடுப்பவர் தன் தானத்தை வெளியில் சொல்லலாம். ஆனால், ‘தானம் செய்ய வேண்டும்’ என்ற எண்ணத்தை மற்றவர்களுக்கும் ஏற்படுத்துவதாக மட்டுமே அது இருக்க வேண்டும். ‘என் உதவியால் இவர் வாழ்கிறார்’ என்பது போல இருக்கக்கூடாது.

இத்தாலியின் வெனிஸ் நகருக்கு அருகிலுள்ள ஒரு சிறுநகரத்தில், தான் நேரில் பார்த்த சம்பவத்தை முரளிதர் குப்தா என்ற தொழிலதிபர் எழுதியிருக்கிறார். அவரும் அவரது நண்பரும் ஒரு காபி ஷாப்புக்கு காபி குடிக்கப் போயிருக்கிறார்கள். அப்போது பக்கத்து டேபிளில் வந்து அமர்ந்த உள்ளூர் நபர் ஒருவர், “இரண்டு காபி! ஒன்று எனக்கு... இன்னொன்று சுவருக்கு” என்றிருக்கிறார். இவர்களுக்குக் குழப்பம். வந்தவர் தனியாகத்தான் வந்தார். இரண்டு காபி எதற்கு ஆர்டர் செய்தார்? ஒன்றைச் சுவருக்கு என்றாரே... சுவர் எங்காவது காபி குடிக்குமா?

இவர்கள் அமைதியாக அமர்ந்து நடப்பதைக் கவனித்தார்கள். அந்த நபருக்கு ஒரு கப் காபிதான் வந்தது. ஆனால் இரண்டு காபிக்கான பில் வந்தது. அதைக் கொடுத்துவிட்டு அவர் போய்விட்டார். அடுத்த நிமிடமே அந்த சர்வர், அங்கிருந்த சுவர் ஒன்றில் ‘ஒரு கப் காபி’ என எழுதிய ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டினார்.

சில நிமிடங்களில் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். “மூன்று கப் காபி... அதில் ஒன்று சுவருக்கு” என ஆர்டர் செய்தார்கள். அவர்களுக்கு இரண்டு கப் காபியும், மூன்று காபிக்கான பில்லும் வந்தது. கொடுத்துவிட்டு அவர்கள் போய்விட்டனர். இப்போது சுவரில் இன்னொரு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது. இப்போதுதான் அவர்கள் அந்தச் சுவரை நன்கு கவனித்தார்கள். அதில் இப்படி நிறைய ஸ்டிக்கர்கள் இருந்தன.

கொஞ்ச நேரத்தில் அதே கடைக்கு இன்னொருவர் வந்து டேபிளில் அமர்ந்தார். லேசாக அழுக்கேறிய உடை அணிந்து, தலை கலைந்து சோகமாக இருந்தார். அமர்ந்ததும் சுவரைப் பார்த்தார். அதில் நிறைய ஸ்டிக்கர்கள் இருந்ததைக் கண்டு மகிழ்ந்தார். சர்வரிடம், “ஒரு காபி... சுவரிலிருந்து” என ஆர்டர் செய்தார். மற்ற எல்லோருக்கும் தருவதைப் போல அதே மரியாதையுடன் அவருக்கு காபி கொண்டுவந்தார் சர்வர். காபியைக் குடித்த அந்த நபருக்கு பில்லும் வரவில்லை; அவர் பணமும் தரவில்லை. எழுந்து போய்விட்டார். அடுத்த நிமிடம் சர்வர் அந்தச் சுவரிலிருந்து ஒரு ஸ்டிக்கரைப் பிய்த்து எடுத்துவிட்டார்.

இப்போது முரளிதர் குப்தாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அந்த நகரத்து மக்களின் ஈகைக் குணத்துக்குச்

சாட்சியாக அந்தச் சுவர் நிற்கிறது. நம்ம ஊர் டீக்கடை வாசல்களில் கையேந்தி நிற்கும் யாசகர்களின் நிலை அந்த ஊரில் யாருக்கும் இல்லை. இருப்பவர்கள் வந்து இயன்றதைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். தேவை உள்ளவர்கள் யாரும் வாசலில் தயங்கி நின்று கையேந்த வேண்டியதில்லை. கம்பீரத்தோடு, தன்மானத்தை இழக்காமல் உள்ளே வந்து அமர்ந்து சாப்பிடுகிறார்கள். தனக்கான காபிக்குக் காசு கொடுத்தது யார் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதனால் நன்றி தெரிவிக்க கூழைக் கும்பிடு போட வேண்டியதும் இல்லை. ஒரு சுவர் எத்தனை அழகாக மனிதாபிமானத்தைப் பகிர்கிறது.

பசியில் தவிக்கும் முதியோருக்கும், நோயாளிகளுக்கும் குறைந்த விலையில் உணவு கொடுக்கும் பல உணவகங்கள் தமிழகத்தில் ஆங்காங்கே உண்டு. தங்களிடம் மிஞ்சிய உணவுப்பொருட்களைப் பொது இடத்தில் வைத்து, யாரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளச் செய்யும் சேவையும் பல நகரங்களில் இப்போது வந்திருக்கிறது. உணவகங்களிலும் விழாக்களிலும் மிஞ்சுகிற உணவுகளைச் சேகரித்து, ஆதரவற்றோர் இல்லங்களுக்கு வழங்குகிற சேவையை இளைஞர்கள் பலர் செய்கிறார்கள். இந்தச் சேவைகளைச் செய்பவர்களிடம் மனிதாபிமானம் மட்டுமே அளவு கடந்து இருக்கிறது.

தருவதிலும் பகிர்வதிலும் இன்பம் காண்பதுதான் மானுட இயல்பு. ஆப்பிரிக்கப் பழங்குடி மக்களின் வாழ்க்கைமுறையை ஆராய்ச்சி செய்யப்போன ஒரு மானுடவியலாளர், தான் திகைத்துப் போன சம்பவம் குறித்து எழுதியிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட பழங்குடி இனக் குழந்தைகளை மொத்தமாக ஒரு கிராமத்து மரத்தடியில் திரட்டினார் அவர். எல்லோரையும் நூறு மீட்டர் தொலைவில் ஒரு கோட்டில் நிற்கச் சொல்லிவிட்டு, ஒரு கூடை நிறைய சாக்லேட்டை வைத்துவிட்டு, ''நான் விசில் அடித்ததும் ஓடிப்போய் உங்களில் யார் முதலில் அந்தக் கூடையைத் தொடுகிறார்களோ, அவர்களுக்கே இந்த சாக்லேட் அத்தனையும்'' என்றாராம்.

விசில் அடித்ததும் அங்கு நடந்த காட்சியை, அவர் கண்களாலேயே நம்ப முடியவில்லை. அத்தனைக் குழந்தைகளும் கைகோர்த்துக் கொண்டு ஒரே சீராக ஓடி அந்தக் கூடையைத் தொட்டு, சாக்லேட்களைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டனர். "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என அவர் கேட்டதற்கு அந்தக் குழந்தைகள் தங்கள் மொழியில், "உபுண்டு" என்றன கோரஸாக! ‘அடுத்தவர்கள் துக்கத்தில் இருக்கும்போது நான் மட்டும் தனியாக எப்படி சந்தோஷப்பட முடியும்?’ என்பதே இதன் அர்த்தம். எந்தக் குழந்தையையும் ஏமாற்றத்துடன் வேடிக்கை பார்க்க வைத்துவிட்டு, மற்றவர்கள் சாப்பிடத் தயாராக இல்லை.

மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஓட்டப் பந்தயம் நடந்தது. திரண்டிருந்த பார்வையாளர்கள் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்க, அந்தக் குழந்தைகளின் முகத்தில் களங்கமற்ற சிரிப்பு தவழ்ந்தது. நடுவர் கொடி அசைத்ததும் அவர்கள் ஓட ஆரம்பித்தனர். தூரத்தில் இருந்தது வெற்றிக்கோடு. எல்லோரும் அதைப் பார்த்தபடி ஓடிக் கொண்டிருக்க, திடீரென ஒரு சிறுவன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான். விழுந்ததில் உடலெங்கும் சிராய்ப்பு.

பயத்திலும் வலியிலும் அவன் அழ, உடன் ஓடிக் கொண்டிருந்த அத்தனைக் குழந்தைகளும் ஓட்டத்தை நிறுத்திவிட்டு அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவனைத் தூக்கிவிட்டு, கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் சொல்லி, எல்லோரும் சேர்ந்து அவனைத் தங்கள் தோளில் தாங்கிப் பிடித்துக்கொண்டு ஓட்டத்தைத் தொடர்ந்தனர். வெற்றிக்கோட்டை அத்தனை பாதங்களும் இணைந்தே மிதித்தன. பார்வையாளர்கள் திகைத்துப் போய் எழுந்து நின்று கை தட்டினர். அவர்கள் மனதில் எழுந்த கேள்வி... ‘இவர்களா மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்?’

தருவதும் இன்பம்... பகிர்வதும் இன்பம்... இன்பத்தை இழக்காமல் இருப்போம்.



## மிகச்சிறந்த விற்பனையாளர்!



உயர்நிலைப் பள்ளியைத் தாண்டிப் படிக்க முடியாத வறுமை. வேறு வழியின்றி ஷூ பாலீஷ் போடும் வேலையைச் செய்து வளர்ந்தான் ஒரு சிறுவன். பேப்பர் போடுவது, கட்டட வேலை, ஹோட்டலில் பாத்திரங்கள் கழுவுவது என்று எதை எதையோ செய்து வளர்ந்தான். பேச்சுத்திறமை தன்னை ஒரு நல்ல விற்பனையாளராக மாற்றும் என்று கனவு கண்டான். உள்ளூரில் ஒரு கார் ஷோரூமில் போய் வேலை கேட்டான். படிக்காத இவன் மீது அங்கிருந்த மேனேஜருக்கு நம்பிக்கை இல்லை. கெஞ்சிக் கேட்டதால், தற்காலிக வேலையில் சேர்த்துக்கொண்டார். முதல் நாளே ஒரு காரை அவன் விற்றுவிட்டான். மற்றவர்களுக்கு ஆச்சர்யம். அடுத்த ஒரே மாதத்தில், அங்கிருந்த அத்தனை விற்பனையாளர்களும் விற்றதைவிட அதிக கார்களை அவன் விற்றான். எல்லோரும் பொறாமையில் அவன் மீது ஏதேதோ புகார்கள் சொல்லி வேலையைவிட்டுத் துரத்தினார்கள்.

தன் அனுபவத்தை வைத்து செவர்லே கார் ஷோரூமில் வேலைக்குச் சேர்ந்த அவர் பெயர், ஜோ ஜிரார்டு. அடுத்த 15 ஆண்டுகளில் அவர் விற்ற கார்களின் எண்ணிக்கை 13,001. இடையில் ஓராண்டில் 1,425 கார்களை விற்றார் அவர். சராசரியாக ஒரு நாளைக்கு நான்கு கார்கள். ‘உலகின் மிகச்சிறந்த விற்பனையாளர்’ என்று பெயர் பெற்றார்.

எப்படி இது சாத்தியமானது? தான் கார் விற்கும் ஒவ்வொரு வாடிக்கையாளரின் முகவரியையும் வாங்கி, அவ்வப்போது கடிதங்கள் அனுப்புவார் ஜிரார்டு. அவர்களைச் சந்திக்க நேர்ந்தால் புகழ்ந்து பேசுவார். புத்தாண்டு, அவர்களின் பிறந்த நாள், விசேஷ தினங்கள் என்று எல்லாவற்றுக்கும் வாழ்த்துக் கடிதங்கள். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான கடிதங்கள். இந்த எதையும் அவர் வெறுமனே வியாபாரத்தை மனதில் வைத்து மட்டுமே செய்யவில்லை. நிஜமான அக்கறையுடன் செய்தார். மக்கள் அவரை அன்பான விற்பனையாளராக நினைவு வைத்திருந்தனர். கார் வாங்க நினைக்கும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அவரையே பரிந்துரை செய்தனர்.

## தீர்வுகளை உள்ளே தேடுங்கள்!




நிஸான் கார் நிறுவனம் 1999-ம் ஆண்டு கிட்டத்தட்ட மூடப்படும் நிலைக்கு வந்தது. பல கோடி டாலர்கள் கடனில் நிறுவனம் தத்தளித்தது. பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது மார்க்கெட்டைப் போட்டி நிறுவனங்களிடம் இழந்துகொண்டே வந்தது. புதிய அறிமுகங்களோ, வித்தியாசமான முயற்சிகளோ இல்லாததால், அந்த நிறுவன கார்களை வாங்க மக்கள் தயங்கினார்கள். கடைசியில் நிஸான் நிறுவனம் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பிரெஞ்சு கார் நிறுவனமான ரெனோவுடன் கூட்டணி அமைத்தது. ரெனோ நிறுவனத்தை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றிய நிர்வாகியான கார்லோஸ் கோஸ்ன் என்பவரைக் கூப்பிட்டு, தங்கள் நிறுவனத்தையும் மீட்குமாறு நிஸான் கேட்டுக்கொண்டது.

சவாலான ஒரு காலகட்டத்தில் நிஸான் நிறுவனத்துக்கு வந்தார் கார்லோஸ். ஏற்கனவே தொடர் நஷ்டத்தால் அங்கு பணியாற்றும் அனைவரும் மனதளவில் சோர்ந்து போயிருந்தார்கள். இந்த நேரத்தில் வெளியிலிருந்து வரும் ஒரு நிர்வாகி, அதிரடியாகவும்


## மாற்றிவிடுங்கள்!

ருச்சி மோடி, டாடா ஸ்டீல் நிறுவனத்தின் தலைவராக இருந்தவர். ஜாம்ஷெட்பூர் நகரில் இருக்கும் டாடா இரும்புத் தொழிற்சாலையின் ஒரு பெரிய மைதானத்தில் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தி, தொழிலாளர்களின் பிரச்னைகளைக் கேட்பது அவர் வழக்கம்.

ஒருமுறை அவரிடம் விநோதமான ஒரு பிரச்னை வந்தது. ‘‘அதிகாரிகள் பயன்படுத்தும் கழிப்பறைகள் சுத்தமாக இருக்கின்றன. அதே நேரத்தில் தொழிலாளர்கள் பயன்படுத்தும் கழிப்பறைகள் சுகாதாரமே இல்லாமல் இருக்கின்றன. இதனால் எங்களுக்கு நோய்கள் வருகின்றன’’ என்று புகார் செய்தார் தொழிலாளர் ஒருவர். உடனே தொழிற்சாலை மேனேஜரை அழைத்த ருச்சி மோடி, “இந்தப் பிரச்னையைச் சரிசெய்யுங்கள்” என்று உத்தரவிட்டார். மேனேஜர் “இதைச் சரிசெய்ய ஒரு மாதம் ஆகும்” என்று அலட்சியமாகப் பதில் சொன்னார்.

மேனேஜருக்கு இதில் அக்கறையில்லை என்பது ருச்சி மோடிக்குப் புரிந்தது. “அவ்வளவு நாள் எதற்கு? நான் ஒரே நாளில் சரிசெய்கிறேன்” என்றார். மறுநாள் ஒரே ஒரு தொழிலாளியை அழைத்துக்கொண்டு கழிப்பறைப் பகுதிக்குப் போனார். ‘அதிகாரிகளின் கழிப்பறை’ என்று இருந்த போர்டைக் கழற்றி தொழிலாளர் கழிப்பறை வாசலிலும், அங்கிருந்த போர்டை அதிகாரிகள் கழிப்பறை வாசலிலும் மாட்டச் சொன்னார். அது மட்டுமில்லை, 15 நாட்களுக்கு ஒருமுறை இப்படி மாற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டார். அதன்பின் இரண்டு இடங்களும் ஒரேமாதிரி சுகாதாரமாக மாறிவிட்டன.

பிரச்னைகளைப் பொறுமையாகக் கேட்டு, தீர்வுகளை வேகமாகத் தருபவர்களே மேன்மையான மனிதர்கள். அதற்காகப் புதுப்புது வழிகளை அவர்கள் கண்டறிவார்கள்.



கடுமையாகவும் நடந்துகொண்டால் எந்த நல்ல மாற்றத்தையும் கொண்டுவர முடியாது.

அதனால் கார்லோஸ் ஒரு முடிவு எடுத்தார். நிறுவனத்தின் தலைமை நிர்வாகிகளைக் கூப்பிட்டார். ‘எதையெல்லாம் சரி செய்தால் நிறுவனம் லாபத்தில் இயங்கும் என்று ஒரு திட்டம் கொடுங்கள்’ என்று கேட்டார். இதேபோல ஒவ்வொரு குழுவிடமும் கேட்டார். கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் வரை எவரையும் விடவில்லை. எல்லோரும் கொடுத்த பரிந்துரைகளை வாங்கிக்கொண்டார். தலைமை நிர்வாகிகள் முதல் கீழ்மட்ட அதிகாரிகள் வரை எல்லோரையும் கூப்பிட்டு கூட்டம் போட்டார். “நிறுவனம் மோசமான நிலையில் இருக்கிறது. நஷ்டத்தைத் தவிர்த்து நம் நிறுவனத்தைக் காப்பாற்ற சில முடிவுகள் எடுக்கப் போகிறோம். இது என் முடிவு கிடையாது. நீங்கள் கொடுத்த பரிந்துரைகளை நான் அமல்படுத்துகிறேன். இதைத் தவிர நம்மிடம் வேறு வழிகள் கிடையாது” என்றார்.

மிகக் கடுமையான முடிவுகள். தொழிற்சாலைகள் மூடப்பட்டன, பலர் பணியிலிருந்து நீக்கப்பட்டனர், செலவுகள் குறைக்கப்பட்டன. ஆனால், எதற்கும் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. காரணம், எல்லாமே நிஸான் ஊழியர்கள் கொடுத்த பரிந்துரைகள். அடுத்த இரண்டே ஆண்டுகளில் நிஸான் மற்றும் ரெனோ நிறுவனங்கள் இணைந்து வளர்ந்தன. நஷ்டத்திலிருந்து மீண்டது மட்டுமில்லாமல், நல்ல லாபத்தையும் சம்பாதித்தன.

ஒருவேளை கார்லோஸ் இந்த முடிவுகளை அவராகவே எடுத்து திணித்திருந்தால், விளைவுகள் மோசமாகி இருக்கலாம். ‘உங்களையும் உங்கள் நிறுவனத்தையும் காப்பாற்ற நீங்கள் முடிவுகள் எடுங்கள்’ என்று அதிகாரம் கொடுத்துச் சாதித்த வித்தியாசமான தலைவர் அவர்.



## நம்மை மாற்றும்

# நல்ல பழக்கம்!

எல்லாவற்றையும்விடப் பணத்துக்கு அதிக மதிப்பு உண்டு. ஆனால், அந்தப் பணத்தாலும் வாங்கமுடியாத விஷயங்கள் சில உண்டு. அன்பு, நம்பிக்கை, பொறுமை, கண்ணியம், மரியாதை, அறம், மாண்பு, நடத்தை என ஒரு சின்ன பட்டியலே போடலாம். பணம் இருப்பதாலேயே ஒருவர் பணக்காரர் ஆகிவிட முடியாது; வறுமையில் வாழ்கிறவர்கள் எல்லோருமே ஏழையும் கிடையாது.

துணிக்கடைக்குப் போனார் ஒரு பணக்காரப் பெண்மணி. கடையின் மேனேஜர் பணிவாக வந்து அவரை வரவேற்க, "என் மகனுக்குத் திருமணம். அதற்காக எல்லோருக்கும் டிரஸ் எடுக்க வேண்டும்" என்கிறார் அவர். அந்தப் பெண்மணிக்கு உதவி செய்ய இரண்டு ஊழியர்களை அனுப்பினார் மேனேஜர்.

பல மணி நேரம் எல்லாத் தளங்களிலும் தேடி அலசி தரமான, விலையுயர்ந்த துணிரகங்களைத் தங்கள் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எடுத்தார் அந்தப் பெண்மணி. எந்தத் துணியிலும் எவ்வளவு விலை போட்டிருக்கிறது என்றுகூடப் பார்க்கவில்லை.

எல்லாம் எடுத்து முடித்ததும் மேனேஜரைக் கூப்பிட்டவர், ''எங்கள் வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண்ணிற்கும் டிரஸ் கொடுக்க வேண்டும். இருப்பதிலேயே மிகக்குறைந்த விலையில் ஒரு சேலை கொடுங்கள்'' எனக் கேட்டார்.

"எங்கள் கடையில் தரம் குறைந்த, விலை மலிவான துணிகள் இல்லை'' எனச் சொன்ன மேனேஜர், அந்தப் பெண்மணி கேட்டதற்காக ஒரு ஊழியரை அனுப்பி, வேறொரு கடையிலிருந்து ஒரு மலிவு விலைப் புடவை வாங்கி வரச் சொன்னார். அந்தப் பெண்மணியும் அதைத் தனியாக வாங்கி வைத்துக்கொண்டார்.

சற்று நேரத்திற்குப் பிறகு, சாயம் போன புடவை அணிந்தபடி ஒரு பாமரத்தனமான பெண் தயக்கத்தோடு அந்தக் கடைக்குள் நுழைந்தார். கடையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் விதவிதமான துணி ரகங்களை மிரட்சியோடு பார்த்தார். தங்கள் கடைக்கு இது போல கஸ்டமர்கள் வருவதில்லை என்பதால், மேனேஜருக்கு வித்தியாசமாகப் பட்டது. அந்தப் பெண்மணியை அணுகி விசாரித்தார்.

"எங்கள் முதலாளியின் மகனுக்குக் கல்யாணம் ஆகப் போகுது. அந்தப் பிள்ளைக்கு என்ன டிரஸ் எடுக்கறதுன்னு எனக்குத் தெரியலை. அதுக்குப் பதிலா, முதலாளியம்மாவுக்கு ஒரு புடவை எடுத்துப் பரிசாகக்

கொடுக்கலாம்னு நினைக்கறேன். உங்க கடையில் இருக்கறதுல கொஞ்சம் விலை அதிகமா இருக்கற புடவைகளைக் காட்ட முடியுமா?'' என்று கேட்ட அந்தப் பெண்மணி, தனது பழைய பர்ஸில் சுருட்டி வைத்திருந்த ரூபாய் நோட்டுகளை வெளியில் எடுத்தார்.

மேனேஜர் இன்னும் பேசியபோதுதான் தெரிந்தது, சற்று நேரத்துக்கு முன்பு வந்து பல லட்சங்களுக்குத் தன் குடும்பத்துக்கு டிரஸ் வாங்கிய பெண்மணியின் வீட்டுப் பணிப்பெண்தான் இவர் என்று! இந்த பணிப்பெண்ணுக்கு வெறும் 300 ரூபாயில் ஒரு புடவையை அந்த முதலாளியம்மா வாங்கிச் சென்றிருக்க, பணிப்பெண்ணோ தன் முதலாளியம்மாவுக்கு 5 ஆயிரம் ரூபாயில் விலையுயர்ந்த புடவை வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியோடு போனார்.

இவர்களில் யார் மேன்மைமிக்கவர்?!

**சு**ற்றுலா சென்றிருந்த ஓர் இளம் தம்பதியினர், நட்சத்திர விடுதியில் தங்கியிருந்தனர். அவர்களின் ஆறு மாதக் கைக்குழந்தை பசியில் அழுதபோது, விடுதியில் இருக்கும் ரெஸ்டாரன்ட்டுக்கு போன் செய்து பால் கேட்டனர்.

“நாங்கள் பால் என்று தனியாக விற்பதில்லை. காபி மட்டுமே இங்கு கிடைக்கும். குழந்தைக்கு வேண்டும் என்றால், காபி பவுடர் கலக்காமல் வெறும் பால் மட்டும் தருகிறோம். ஆனால் காபிக்கான பில் 200 ரூபாய் நீங்கள் செலுத்த வேண்டும்'' என்று பதில் கிடைத்தது. “பரவாயில்லை'' என்று சொல்லிப் பால் வாங்கி ஊட்டினர்.

வெளியில் கிளம்பி, நாள் முழுக்கப் பல இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது வழியில் ஓரிடத்தில் குழந்தை பசியில் அழுதது. பக்கத்தில் எங்குமே உணவகங்கள் எதுவுமில்லை. தங்கியிருந்த விடுதியிலிருந்தே பால் வாங்கி வந்திருக்கலாம் என நினைத்து வருந்தினார்கள். சிறிய கிராமம் போல இருந்த அங்கு ரோட்டோரமாக ஒரு பெரியவர் டீக்கடை



வைத்திருந்தார். அதை விட்டால் வேறு எங்கும் பால் கிடைக்காது என்று தோன்றியது.

'நம் தகுதிக்கு நாம் இப்படி ரோட்டோரக் கடையில் குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுப்பதா?' என தயங்கினான் குழந்தையின் தந்தையான இளைஞன். “வேற வழியில்லைங்க... கடை சுத்தமாதான் இருக்கு, பாருங்க! கிராமத்து மனுஷங்க எதுவும் கலப்படம் செய்ய மாட்டாங்க'' என்றாள் குழந்தையின் அம்மா.

“கார்ல வந்து நாம இறங்கறதைப் பார்த்ததும் அந்தக் கிழவன் விலையை அதிகமா சொல்லுவான் பாரு!'' என்று புலம்பிக்கொண்டே இறங்கினான், குழந்தையின் தந்தை.

“குழந்தைக்குப் பால் வேண்டும்'' என்று அவர்கள் கேட்டதும், டீக்கடைக்காரப் பெரியவர் சிரித்தார். அழும் குழந்தைக்கு ஏதோ பாட்டு பாடி ஆறுதல் சொன்னபடி, சுடுதண்ணீரில் பால் புட்டியை நன்றாகக் கழுவினார். சுடச்சுடப் பாலை எடுத்து, குடிக்கும் பக்குவத்தில் ஆற்றி, குழந்தையின் பால் புட்டியில் பக்குவமாக ஊற்றிக் கொடுத்தார். “நீங்க காபி, டீ குடிக்கறீங்களாம்மா?'' என விசாரித்தார். குழந்தையின் அப்பா, அம்மா இருவருமே வேண்டாம் என மறுத்துவிட்டனர்.

''பால் எவ்வளவுங்க?'' என அவன் பர்ஸை எடுக்க, சிரித்துக்கொண்டே அவர்களைக் கும்பிட்ட பெரியவர், “குழந்தையின் பசிக்குப் பால் கொடுக்கறது புண்ணியம்ங்க. அதுக்கு காசு வாங்கறது தப்பு'' என்றார். அதோடு நிற்கவில்லை. அவர்கள் எங்கே போகிறார்கள் என்று விசாரித்து, “போற வழியில மதியத்துக்கு மேல கடைங்க இருக்காது. பால் கிடைக்கறது கஷ்டம். உங்ககிட்ட ஃபிளாஸ்க் இருந்தா இன்னும் கொஞ்சம் பால் வாங்கிக்கோங்க. குழந்தை மறுபடியும் அழப் போகுது'' என்று சொல்லி, ஃபிளாஸ்க்கில் பால் ஊற்றிக் கொடுத்தார்.

களங்கமற்ற அன்பில் நெகிழ்ந்துபோன அந்த இளைஞன், டீக்கடை முதியவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். ''பணத்தைப் பற்றி எனக்கு இருந்த நினைப்பையே நீங்க மாத்திட்டீங்க! பணம் வச்சிருக்கறவங்க எல்லாரும் பணக்காரங்க இல்லை. அது எப்படி பயன்படுது என்பதை வச்சித்தான் பணத்துக்கு மதிப்பு. பணத்தைத் தாண்டியும் சம்பாதிக்க வேண்டியது வாழ்க்கையில் எத்தனையோ இருக்கு'' என்றான்.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அடுத்தவர்களுக்குச் செய்யும் உதவிகள் மகத்தானவை. பெரும் பணம் தருவதைவிட மிகுந்த மனநிறைவை இது தரும். இந்த உலகம் நல்ல மனிதர்களால் நிறைந்திருக்கிறது. நம்மால் அப்படி ஒருவரைச் சந்திக்க முடியாதா எனத் தேடுவது மட்டுமே மாற்றத்தைத் தந்துவிடாது; நாமும் அப்படிப்பட்ட ஒருவராக மாற வேண்டும் என நினைப்பதே நம்மை மேன்மையாக மாற்றும். ●

## எது தருகிறது கண்ணியம்?

விவேகானந்தரைப் பார்த்து ஒருமுறை ஓர் ஆங்கிலேயர் கேட்டார். ‘‘எங்களைப் பாருங்கள். கோட், சூட், டை எல்லாம் அணிந்து மேன்மையான தோற்றத்துடன் இருக்கிறோம். நீங்கள் ஏன் இப்படி ஒழுங்கற்ற முறையில் காவி ஆடைகளை அணிந்திருக்கிறீர்கள்?’’

விவேகானந்தர் புன்னகையோடு பதில் சொன்னார். ‘‘உங்கள் பண்பாட்டில் ஒரு தையல்காரர்தான் ஒருவரை கண்ணியமானவராக மாற்றுகிறார். ஆனால், இந்தியப் பண்பாட்டில் ஒருவரின் நடத்தையே அவரைக் கண்ணியமானவராகவும் மேன்மையானவராகவும் ஆக்குகிறது.’’



## இந்தச் சம்பளம் போதும்!

மறைந்த பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, தன் இளம்பருவத்தில் காங்கிரஸ் கட்சியில் முழு நேர ஊழியராக வேலை பார்த்தார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் இப்படிக் கட்சிக்காக முழுநேரமும் உழைத்தவர்களுக்குச் சம்பளம் தரப்பட்டது. சாஸ்திரிக்கு மாதச் சம்பளம் 40 ரூபாய் மட்டுமே.

ஒரு சமயம் அவரைத் தேடி அவரது நண்பர் ஒருவர் வந்தார். ‘‘ஐயா! எனக்கு அவசரமாக 50 ரூபாய் கடன் வேண்டும்’’ என்று கேட்டார். ‘‘எனக்குக் கிடைப்பதோ மாதம் 40 ரூபாய் சம்பளம். இதை வைத்து வீட்டை நிர்வாகம் செய்வதே சிரமம். இந்த நிலையில் நான் எப்படி 50 ரூபாய் கடன் கொடுக்க முடியும்?’’ என்றார் சாஸ்திரி. கடன் கேட்டவர் கஷ்டத்தில் இருப்பது தெரிந்ததும், ‘‘கொஞ்சம் காத்திருங்கள்’’ என்று சொன்ன சாஸ்திரியின் மனைவி, உள்ளே போய் 50 ரூபாய் கொண்டு வந்து நீட்டினார். வந்தவர் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு போனார்.

அவர் போனதும் சாஸ்திரி தன் மனைவியிடம், ‘‘உனக்கு ஏது இந்தப் பணம்?’’ என்று கேட்டார். ‘‘நீங்கள் மாதாமாதம் கொடுக்கிற சம்பளப் பணத்தில் சிக்கனமாகக் குடும்பம் நடத்தி, மாதம் 10

## பக்குவத் தயாரிப்பு!

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஒரு கல்வி நிலையத்தில் நடைபெற்ற பாராட்டு விழா ஒன்றின்போது ஒரு பிரிட்டிஷ்காரர் ஆணவத்தோடு கூறினார்... ‘‘இறைவன் ஆங்கிலேயர்களாகிய எங்கள் மீது அதிக அன்பு கொண்டவர். மிகவும் முயற்சி செய்து அதிக விருப்பத்தோடு எங்களைப் படைத்தார். எனவேதான் நாங்கள் வெள்ளை நிறத்தில் இருக்கிறோம்!’’

அந்தக் கூட்டத்தில் நமது முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் அடுத்துப் பேசினார். அந்த ஆங்கிலேயரின் ஆணவப் பேச்சைக் கேட்டு புன்முறுவலுடன் அவர் தனது உரையை இப்படி ஆரம்பித்தார்...

‘‘நண்பர்களே! ஒருமுறை இறைவன் ரொட்டி தயாரிக்க விருப்பம் கொண்டார். உடனே ரொட்டி தயாரிக்க உட்கார்ந்தும் விட்டார். அவர் தயாரித்த முதல் ரொட்டி சிறிது வேகவில்லை. அதன் காரணமாகத்தான் ஆங்கிலேயர்கள் வெள்ளையாகப் பிறந்தனர். இரண்டாவது ரொட்டி அதிக நேரம் வெந்தது. அதன் மூலம் ஆப்பிரிக்கக் கறுப்பினத்தவர்கள் பிறந்தனர். இவ்வாறு இரண்டு முறை செய்த பயிற்சியின் மூலம் அனுபவம் பெற்ற இறைவன், மூன்றாவது ரொட்டியைச் சரியான பக்குவத்தில் தயாரித்தார். அது அரைவேக்காடாகவும் இல்லை; கறுத்தும் போகவில்லை. அதன் காரணமாக இந்தியர்களாகிய நாங்கள் பிறந்தோம்!’’

இந்தப் பதிலைக் கேட்ட அந்த ஆங்கிலேயர் மிகவும் வெட்கித் தலைகுனிந்தார்.



ரூபாய் வீதம் மிச்சம் பிடித்து வைத்திருந்தேன்” என்றார் மனைவி. சிக்கனமாகக் குடும்பம் நடத்தும் தனது மனைவியின் பண்பைப் பாராட்டினார் சாஸ்திரி. மறுநாள் காலை அலுவலகம் சென்றதும் கட்சியின் பொருளாளரிடம், ‘‘என் மனைவி மாதம் 30 ரூபாய்க்குள்ளே குடும்பத்தைச் சிக்கனமாக நடத்துகிறார். ஆகவே அடுத்த மாதம் முதல் எனக்கு 30 ரூபாய் சம்பளமே போதும்” என்று சொல்லி விட்டார்.

அந்தப் பண்பே அவரைப் பிரதமர் பதவி வரை உயர்த்தியது.

## நம்பிக்கை என்னும் அச்சாணி!

உலகத்தை வெல்வதற்குப் புறப்பட்ட பேரரசன் அலெக்சாண்டர் ஒருமுறை கடுமையான நோயால் பாதிக்கப்பட்டார். அவருடன் இருந்த கிரேக்க வைத்தியர்களால் அவரைக் குணப்படுத்த இயலவில்லை.

அவர் இருந்த இடமோ, அவரது எதிரியான பாரசீக மன்னனின் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதி. பாரசீக மன்னனின் அரண்மனை வைத்தியர் வந்து நோயின் தன்மையறிந்து மருந்து கொடுத்தால் குணமாகும் என்று உடன் இருந்தவர்கள் கூறினர். ஆனால் எதிரி நாட்டு வைத்தியரை எப்படி வரச் சொல்வது என்று அவரது தளபதிகள் தயங்கினர். அதுபற்றிக் கவலைப்படாத அலெக்சாண்டர், வைத்தியரை அழைத்து வரச் சொன்னார். அலெக்சாண்டரைப் பரிசோதித்த வைத்தியர், நோயைக் குணப்படுத்த 2 நாட்களில் மருந்துடன் வருவதாகக் கூறிச் சென்றார்.

2 நாட்கள் போனது... அந்த வைத்தியர் மருந்தில் விஷம் கலந்து எடுத்து வருவதாக ஒற்றர் படைத் தலைவன் செய்தி அனுப்பினார். அந்த மருந்தைச் சாப்பிட வேண்டாம் என அலெக்சாண்டருக்கு எல்லோரும் சொன்னார்கள். சிறிது நேரத்தில் வைத்தியர் வந்து மருந்து கொடுத்தார். மருந்தைக் குடித்த அலெக்சாண்டர், தனக்கு வந்த செய்தி பற்றிச் சொன்னார்.

அலெக்சாண்டர் தன் மீது வைத்திருந்த நம்பிக்கையை நினைத்துத் திகைத்த வைத்தியர், “மன்னரே, மருந்தில் விஷம் எதுவும் கலக்கவில்லை” என்றார். அலெக்சாண்டர் சிரித்தபடிச் சொன்னார்... “நம்பிக்கை என்னும் அச்சாணியை ஆதாரமாகக் கொண்டுதான் இந்த உலகமே சுற்றுகிறது. பாரசீக மன்னனின் அரண்மனை வைத்தியர் தொழில் ஒழுக்கத்தோடு இருப்பதால்தான் அரண்மனையில் வைத்திருக்கிறார்கள் என நம்பினேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை!”

## பக்தியுடன் கொடுத்தார்!

‘ஔவையார்’ வேடத்தில் நடித்துப் புகழ்பெற்ற பக்திப்பாடகர் கே.பி.சுந்தராம்பாள் ஒருமுறை காரில் பயணம் செய்தார். வழியில் ரயில்வே கேட் மூடியிருந்ததால், அவரது கார் நின்றது. காரிலிருந்து இறங்கி ரோட்டோர வியாபாரியிடம் பனங்கிழங்கு வாங்கினார் அவர். கே.பி.சுந்தராம்பாளை அடையாளம் கண்டுகொண்ட அந்த வியாபாரி அவரை வணங்கி, “பணம் வேண்டாம்” என மறுத்துவிட்டார். கே.பி.எஸ் பிடிவாதமாகக் கொடுத்தும் அவர் வாங்கிக் கொள்ளவில்லை.



ரயில் கடந்ததும் கேட் திறந்தது. கே.பி.சுந்தராம்பாள் தன் விபூதிப் பையை எடுத்து அந்த வியாபாரிக்கு விபூதி கொடுத்தார். பக்தியுடன் வாங்கிக்கொண்ட அந்த வியாபாரி, வியப்போடு நிமிர்ந்து பார்க்கும் முன்பு கார் புறப்பட்டுவிட்டது. விபூதியுடன் காசும் சேர்ந்து விழுந்திருந்ததே வியப்புக்குக் காரணம்.



# மேன்மையின் அடையாளங்கள்!

ஒருவர் மேன்மையான மனிதர் என்பதை உணர்த்தும் அடையாளங்கள் எவை? கீழ்க்காணும் பண்புகளில் சிலவற்றை எவரிடமேனும் கண்டால், அவர்கள் மேன்மையான மனிதர்கள் என்று அறியலாம்.

- யாருமே தங்களைப் பார்க்காத, கண்காணிக்காத நேரங்களிலும் ஒருவர் இயல்பாகவும் நேர்மையாகவும் நடந்துகொண்டால் அவர் மேன்மையானவர்.
- தங்களுக்கு நெருக்கமான மனிதர்களை எப்படி கனிவாக நடத்துகிறார்களோ, அதேபோல அறிமுகமில்லாத மனிதர்களிடமும் கனிவு காட்டினால், அவர் மேன்மையானவர்.
- செல்லப்பிராணிகள் எதையும் வளர்க்காவிட்டாலும், தெருவில் பார்க்கும் நாய்கள் மற்றும் பூனைகளிடமும் விரோதம் காட்டாமல் இருந்தால், அவர் மேன்மையானவர்.
- சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லும், தங்கள் மெதுவான செயல்களால் எரிச்சலூட்டும் முதியோர்களிடமும் பொறுமையும் மரியாதையுமாக நடந்துகொண்டால், அவர் மேன்மையானவர்.
- கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்யும், எந்த விதியையும் மதிக்காமல் விளையாடும், சேட்டையும் குறும்புத்தனமும் நிறைந்த குழந்தைகளிடமும் அன்பாக நடக்க முடிந்தால், அவர் மேன்மையானவர்.
- பொது இடங்களில் தங்களது செயல்கள் (செல்போனில் சத்தமாகப் பேசுவது, குப்பைகளை வீதியில் போடுவது போன்றவை...) அடுத்தவர்களுக்குச் சங்கடம் தரும் என்பதை உணர்ந்து கண்ணியமாக நடந்துகொண்டால், அவர் மேன்மையானவர்.
- தூய்மைப்பணியாளர், ஹோட்டலில் டேபிள் துடைப்பவர், செக்யூரிட்டி, தெருவோரங்களில் இருக்கும் விற்பனையாளர்கள் போன்ற எளிய மனிதர்களிடமும் ஒருவர் மரியாதையாக நடந்துகொண்டால், அவர் மேன்மையானவர்.
- தங்களுக்கு எந்தப் பிரதிபலனும் கிடைக்காது என்பது தெரிந்தும், அடுத்தவர்களுக்குப் பணமும் நேரமும் செலவழித்து உதவிகள் செய்ய ஒருவர் தயாராக இருந்தால், அவர் மேன்மையானவர்.
- தங்கள் நெருங்கிய நண்பர்களோ, உறவினர்களோ ஏதாவது சங்கடத்தில் மாட்டிக்கொண்டு தவிக்கும்போது உடனடியாக ஓடிவந்து உதவிகள் செய்தால், அவர் மேன்மையானவர்.
- ஒருவர் தவறுகள் செய்து பிரச்னையில் சிக்கிக் கொள்ளும்போது, "நான் அப்பவே சொன்னேனே, கேட்டாயா?" என்று குத்திக் காட்டாமல், அந்தப் பிரச்னையிலிருந்து அவரை மீட்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பார்த்தால், அவர் மேன்மையானவர்.
- எவ்வளவு மோசமான மனிதர்களிடமும் இருக்கும் சில நல்ல பண்புகளைக் கண்டறிந்து, அவற்றைப் பாராட்ட ஒருவரால் முடிந்தால், அவர் மேன்மையானவர்.
- அடுத்தவர்களின் விருப்பங்கள், வாழ்க்கைமுறை, முடிவுகள், உணவுப்பழக்கம் போன்றவை எவ்வளவு வித்தியாசமாக இருந்தாலும், 'எனக்கு இதெல்லாம் பிடிக்காது என்றாலும், அவரின் விருப்பங்கள் இவை என்பதால் மதிக்கிறேன்' என்று ஒருவரால் சொல்ல முடிந்தால், அவர் மேன்மையானவர்.
- யாரும் என்னிடம் இவ்வளவு கச்சிதத்தை எதிர்பார்க்கவில்லை என்றாலும், நான் செய்யும் எந்தச் செயலையும் நூறு சதவிகிதம் சரியாகவே செய்வேன் என்று ஒருவர் செயல்பட்டால், அவர் மேன்மையானவர்.
- எப்படிப்பட்ட சூழலிலும், யார் என்ன நினைத்தாலும், அடுத்தவர்கள் மீது வெறுப்பு காட்டாமல், மரியாதைக்குறைவாக எவரையும் நடத்தாமல், 'என் மனசுக்கு இது சரி என்று தோன்றுகிறது. எனவே இதைச் செய்கிறேன்' என்று சரியான செயல்களையே ஒருவர் செய்தால், அவர் மேன்மையானவர். ●


RAMRAJ
LittleStars®
KIDS DHOTIS & KURTA
LET THE LITTLE ONES SHINE IN THE TRENDING TRADITION.



Steal the Spotlight with Style
Culture India™
TRADITIONAL KURTA
DHOTI • PANCHAKACHAM
RAMRAJ


SHIRT CRAFTED
FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC, SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
Crafted for comfort
LINEN PARK®
SHIRTS • TROUSERS • FABRICS • DHOTIS
By
RAMRAJ©
Available at Company Showrooms & All leading Textile Shops


Genistaa®
LEGGINGS
By
RAMRAJ®
Shape up your
Confidence & Style
WITH GENISTA PREMIUM LEGGINGS
CHUDI FIT
Available at Ramraj Cotton Showrooms and all leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



‘உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்’ என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

# நல்ல மனிதராக மாற்றும் பழக்கங்கள்!

ஒரு கிராமத்தில் சிறிய கடை ஒன்று இருந்தது. கிராம மக்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரே கடையாக அது இருந்தது. கடைக்காரர் மிகவும் நல்லவர். கிராமத்தில் எல்லோரையும் தன் உறவினர்கள் போல நினைத்து அன்பு காட்டுவார். யாராவது கடனுக்குப் பொருட்கள் கேட்டாலும் கொடுத்து விடுவார். பணம் வரும்போது அவர்கள் திருப்பிக் கொடுப்பார்கள்.

அவர் மதிய நேரத்தில் சாப்பிட வீட்டுக்குப் போவார். கிராமத்துக்கு ஒரே கடை என்பதால், எந்த நேரத்திலும் யாராவது வருவார்கள். அதனால் மதியத்தில் கடையை மூடுவதில்லை. யாராவது அந்த நேரத்தில் கடைக்கு வந்தால், ''கடையைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வருவார். எந்தப் பொருள் என்ன விலை என்பது எல்லோருக்குமே தெரியும் என்பதால், அந்த நேரத்தில் கடையில் இருப்பவர் தற்காலிகக் கடைக்காரர் ஆகிவிடுவார்.

ஒருநாள் மதியம் திருடன் ஒருவன் திருடும் எண்ணத்துடன் கடைக்கு வந்தான். அது பசி நேரம். கடைக்காரர் அவனிடம், "எனக்குஓர் உதவி செய்யவேண்டும். கொஞ்ச நேரம் கடையைப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் வீட்டிற்குப் போய் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்'' என்று கடையை ஒப்படைத்துவிட்டுப் போனார். திருடன் திகைத்துவிட்டான்.

அந்த நேரத்தில் வந்த சிலரிடம் பணத்தை வாங்கிக்கொண்டு, அவர்கள் கேட்டதைக் கொடுத்தான் திருடன். கடையில் பணப்பெட்டி திறந்தே இருந்தது. அதில் நிறைய பணமும் இருந்தது. அந்தத் திருடனின் திருட்டு நண்பன் ஒருவன் அங்கே வந்தான். "நண்பா, திருடுவதற்கு இதைவிடச் சரியான வாய்ப்பு நமக்குக் கிடைக்காது. கடைக்கு யாரும் இப்போது வரவில்லை. பணம், சாமான்களை எடுத்துக்கொண்டு ஓடிவிடலாம்" என்று அவசரப்படுத்தினான். ஆனால், திருடன் மறுத்துவிட்டான். "என்னை நம்பிக் கடையை விட்டுவிட்டுப் போன கடைக்காரருக்குத் துரோகம் செய்யமாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னான்.

சிறிது நேரத்தில் கடைக்காரர் வந்து அவனுக்கு நன்றி சொல்லிவிட்டுக் கடைக்குள் போனார். திருடன் அவரிடம், "எல்லாப் பொருளும் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்" என்றான். கடைக்காரர் மறுத்து, ''அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையால்தான் கடையை ஒப்படைத்துவிட்டுச் சென்றேன். பணத்தையோ பொருளையோ சரிபார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அது உங்களைப் புண்படுத்தும். நான் அதைச் செய்யமாட்டேன்" என்றார்.



திருடன் கண்ணீருடன் கடைக்காரரின் கைகளைப் பற்றிக்கொண்டான். "ஐயா! என்னை மன்னித்துவிடுங்கள். நான் ஒரு திருடன். என் நண்பனும் நானும் உங்கள் கடையில் திருடுவதற்காக வந்தோம். ஆனால், நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கையால், என் இயல்பான திருட்டுக் குணம் இன்று மறைந்துவிட்டது. இனி எப்போதும் திருட மாட்டேன். நேர்மையாக வாழ்வேன்" என்று உறுதியாகச் சொன்னான்.

மேன்மையான ஒரு மனிதருடன் பழகியது ஒரு திருடனையே திருத்துகிறது என்றால், சாதாரண மனிதர்கள் இன்னும் தூய்மையாகிவிடுவார்கள். ஒருவருக்கு இருக்கும் நண்பர்களைப் பொறுத்தே, அவரின் இயல்பு மாறுகிறது. மேன்மையானவர்களுடன் சேர்ந்தால், மனம் தூய்மையாகவும், செயல்கள் நேர்மையாகவும் இருக்கும். வாழ்நாள் முழுக்க நல்லவர்களுடன் இணைந்திருப்பது பாக்கியம்.

**உங்களை மேன்மையானவர்களாக மாற்றும் இன்னும் சில பழக்கங்கள்:**

- அடுத்தவர்களைப் பாராட்டுவது நல்ல பழக்கம் என்றால், உங்களுக்கு நீங்களே பாராட்டுரைகள் சொல்லிக்கொள்வது இன்னும் நல்ல பழக்கம். ஒரு கடினமான வேலையைச் செய்து முடித்தால், ஒரு நண்பருக்கு உதவிகள் செய்தால், புதிதாக ஒரு டிரஸ் போட்டால்... இப்படி எதைச் செய்தாலும் உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். பாராட்டுகளே உங்களை இன்னும் நிறைய செய்யத் தூண்டும்.
- நீங்கள் சந்திக்கும் பிரச்னைகள், நெருக்கடிகளுக்கு அடுத்தவர்கள் மீது பழியைப் போடாதீர்கள். அடுத்தவர்களைக் குறை சொல்லிவிட்டுத் தப்பிப்பது சுலபம். ஆனால். அப்படி இருக்காதீர்கள். உங்கள் செயல்களுக்கு நீங்களே பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் அடுத்தமுறை அப்படி ஒரு பிரச்னை வராமல் உங்களால் தடுக்க முடியும்.
- உங்களைச் சுற்றி இருப்பவர்கள் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் நலனுக்காக அவர்கள் சொல்வது, உங்களின் செயல்களைப் பற்றி அவர்கள் வைக்கும் நேர்மையான விமர்சனங்கள் எல்லாமே உங்களை நல்ல மனிதராகச் செதுக்கும். உங்கள் முன்னேற்றத்துக்காக அவர்கள் சொல்லும் யோசனைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுங்கள். அதேபோல அவர்களுக்கும் யோசனை சொல்லுங்கள்.
- எதையும்நேர்மறையாகப்பார்க்கும்மனநிலையைவளர்த்துக்கொள்ளுங்கள். ஏதோ ஒன்றை இழக்கும்போது, 'ஐயோ, இப்படி ஆகிவிட்டதே' என்று புலம்புகிறவர்கள் முன்னேறுவதில்லை. 'இதைவிட மிகச்சிறந்த ஒன்றை நமக்குத் தருவதற்காகவே காலம் இதை நம்மிடமிருந்து பறித்திருக்கிறது' என்று நினைப்பது நேர்மறைச் சிந்தனை.
- தினமும் உங்கள் உடல்நலனுக்காகவும் மனநலனுக்காகவும் நேரம் ஒதுக்கி எதையேனும் செய்யுங்கள். காலையில் வாக்கிங் போவது, நல்ல இசை கேட்பது, நீங்கள் இருக்கும் துறை சார்ந்து புத்தகங்கள் படிப்பது, புதிய கோர்ஸ்கள் ஏதேனும் சேர்வது என்று எல்லாவற்றையும் பின்பற்றுங்கள். ஆரோக்கியமான உணவு சாப்பிடுங்கள். உற்சாகமான நண்பர்களுடன் உரையாடி மனத்தை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள்.
- யாரைச் சந்தித்தாலும், கண்களை நேரடியாகப் பார்த்து உற்சாகமாகப் பேசுங்கள். அறிமுகம் இல்லாத மனிதர்களிடமும் அருமையாக உரையாட முடிவது நல்ல பண்பு. உங்கள் பேச்சால் யாரோ ஒருவருக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தர முடிந்தால், அதைவிடச் சிறந்த விஷயம் எதுவும் இல்லை. ●

வெண்மை
VENMAII
தமிழ் மாத இதழ்
மலர் 8 இதழ் 4
அக்டோபர் 2023

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்
**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**


இதழாசிரியர்
**வள்ளி**

வடிவமைப்பு
**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



# திரும்பக் கிடைக்கும்!

நெடுஞ்சாலை ஓரமாகப் பழுதாகி நின்றிருந்தது, விலையுயர்ந்த கார் ஒன்று. என்ன பிரச்னை என்று தெரியாமல், அதைச் சரிசெய்யவும் முடியாமல் தவிப்புடன் நின்றிருந்தார், நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர். தனியாகப் பக்கத்து நகருக்கு கார் ஓட்டிச் சென்றவர், இப்படி ஒரு பிரச்னை வரும் என்று எதிர்பார்க்கவில்லை. இரவு நெருங்கிக்கொண்டிருந்ததால், இன்னும் பயமாக இருந்தது.

எனவே, நெடுஞ்சாலையில் செல்வோரிடம் உதவி கேட்டுக்கொண்டிருந்தார். யாரும் நின்று விசாரிக்கக்கூடத் தயாராக இல்லை. அப்போது அந்த வழியாகப் பழைய பைக்கில் சென்ற ஒருவர் நின்று, "என்ன பிரச்னைம்மா?" என்று விசாரித்தார். முரட்டுக் கிராமத்து மனிதர் தோற்றத்திலிருந்த அவரைப் பார்த்ததும் அந்தப் பெண்மணிக்குப் பயம் வந்தது. வழிப்பறித் திருடனோ என்று நினைத்து, "ஒண்ணுமில்லை, நீங்க போங்க" என்று துரத்தினார்.

அந்த மனிதர் கனிவான குரலில், ''நான் உங்களுக்கு உதவி பண்ணத்தாம்மா வந்திருக்கேன். பக்கத்துல எதுவும் மெக்கானிக் கடை இல்லை. நீங்க புழுக்கத்துலயும் புழுதியிலயும் ஏன் வெளியில் நிக்கறீங்க? கார்ல உட்காருங்க'' என்று சொல்லிவிட்டு, காரின் முன்பக்கத்தைத் திறந்து பார்த்தார். கார் டிக்கியில் போய் உபகரணங்களைத் தேடி எடுத்துவந்து சரிசெய்ய முயன்றார். காருக்கு அடியில் படுத்தபடி நுழைந்து எதையோ சரிசெய்த பிறகே பிரச்னை சரியானது.

"இப்போ ஸ்டார்ட் பண்ணுங்க, கார் போகும்" என்றார் அவர். அதேபோல கார் இயங்கியது. அந்த மனிதரின் உடம்பெல்லாம் அழுக்காகி இருந்தது. காரிலிருந்து இறங்கிய பெண்மணி, "உங்களுக்கு எவ்வளவு பணம் தரணும்?" என்று கேட்டார். அந்த மனிதர் சிரித்தபடி, "நான் மெக்கானிக் இல்லம்மா. இது என் தொழிலும் இல்லை. எனக்குத் தெரியும்ங்கறதால உதவி செய்தேன். எனக்குப் பணம் வேணாம். நீங்கள் பத்திரமா போங்க" என்றார். பெண்மணி தயங்கி, "இந்த நடுவழியில் நீங்கள் உதவி செய்யலைன்னா, என் நிலைமை கஷ்டமாகி இருக்கும். நீங்க வாங்கிக்குங்க" என்று பர்ஸைத் திறந்து பணத்தை எடுத்தார்.

''இல்லம்மா, உதவின்னு செய்துட்டு, அதுக்குப் பணம் வாங்கறது தப்பு. நீங்க ஒண்ணு பண்ணுங்க. என் பெயர் கண்ணன். உதவி தேவைப்படற யாரையாவது பார்த்தீங்கன்னா, அப்போ எனக்குக் கொடுக்க நினைக்கிற தொகையை அவங்களுக்குக் கொடுத்துட்டு என்னை மனசுல நினைச்சுக்கோங்க. அது போதும்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அந்தப் பெண்மணி அவரைத் திகைப்புடன் பார்த்துவிட்டு காரை எடுத்தார். பசியாக இருந்ததால், சில கி.மீ., தூரம் போனதும் ஒரு சிறிய உணவகத்தில் காரை நிறுத்திச் சூடாக வடை சாப்பிட்டுத் தேநீர் அருந்தினார். எளிமையான வீட்டை ஒட்டி இருந்த சிறிய உணவகம். ஒற்றைப் பெண்மணியாக அதை ஒரு கர்ப்பிணி நடத்துவது அவருக்குத் தெரிந்தது. நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாலும், சோர்வே இல்லாமல் புன்னகையுடன் வரவேற்று உபசரித்தார். சுத்தமாகவும் ருசியாகவும் இருந்தது. அந்தக் கர்ப்பிணியின் தோற்றத்திலும் உடையிலும் ஏழ்மை அப்பட்டமாகத் தெரிந்தது. கடைக்கு ரெகுலராக வரும் இன்னொருவருடன் அவர் பேசுவதை வைத்து, அடுத்த மாதம் பிரசவத்துக்காக மருத்துவமனையில் சேர்வதற்குக்கூட அந்தக் கர்ப்பிணியிடம் பணம் இல்லை என்பது தெரிந்தது.



காரில் வந்த பெண், தனக்கு உதவி செய்த கண்ணனை நினைத்துக்கொண்டார். தன் பர்ஸிலிருந்து 25 ஆயிரம் ரூபாயை எடுத்தார். தான் கொடுக்கும் பணத்தை இவர் வாங்குவாரா என்று தயக்கம். வடை வைத்த தட்டுக்கும் டீ டம்ளருக்கும் இடையே அதை மறைத்துவைத்து, "காசு இங்க வச்சிருக்கேன்மா" என்று சொல்லிவிட்டு வேகமாக வந்து காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார். கர்ப்பிணி நிதானமாக வந்து டேபிளைப் பார்த்தபோது திகைத்துவிட்டார். கொஞ்ச நேரத்தில் தன் பழைய பைக்கில் வீடு திரும்பிய கணவரிடம் இதை ஆச்சர்யத்துடன் சொன்னார். "என்ன கார்? வந்தவங்க எப்படி இருந்தாங்க?" என்று விசாரித்த கணவருக்கும் ஆச்சர்யத்தில் உடல் சிலிர்த்தது. ஆம், அந்தப் பெண்மணிக்கு உதவிசெய்த கண்ணன்தான் கர்ப்பிணியின் கணவர்.

சரியான நேரத்தில் யாருக்கோ நாம் செய்த உதவி, நமக்கு உதவி தேவைப்படும்போது வேறு ஏதோ வழியில் கிடைக்கும். இந்த இரக்கச் சங்கிலியை அறுந்துவிடாமல் பராமரிப்பவர்கள் மேன்மக்கள்.

**இ**து உண்மைச் சம்பவம். இதேபோல இன்னொரு சம்பவம். ஆபீஸுக்கு நேரமானதால் ஒருவர் பைக்கில் அவசரமாகச் சென்றுகொண்டிருந்தார். சிக்னல் முடிந்து சிவப்பு விளக்கு எரிய ஆரம்பித்ததும் நிற்க வேண்டும். என்றாலும், அவசரத்தில் அதைத் தாண்டி போக நினைத்தார். ஆனால், முன்னால் போன கார் சிக்னலை மதித்து நின்றுவிட்டது. இவர் பைக் அந்தக் காரில் மோதியது. இதனால் பைக்கின் இண்டிகேட்டர் விளக்கு உடைந்தது. தப்பு செய்தது அவர்தான் என்றாலும், கார் ஓட்டிவந்த முதியவரிடம் சண்டைக்குப் போய் மோசமாகத் திட்டினார். அருகில் இருந்தவர்கள் சமாதானம் செய்தார்கள். அந்த நேரத்தில் ஒருவர் லிஃப்ட் கேட்டார். "முன்ன பின்ன தெரியாதவங்களை வண்டியில் ஏத்த மாட்டேன்" என்று கோபமாகச் சொன்னார். ஒருவர் வந்து யாசகம் கேட்க, "கை, கால் நல்லாதானே இருக்கு! உழைத்துச் சம்பாதிக்கப் பார்" என்று அறிவுரை சொல்லி அனுப்பினார்.

அதே கோபத்துடன் வேலைக்குப் போய், நாள் முழுக்க டென்ஷனாக வேலைகளைப் பார்த்தார். மாலை வீடு திரும்பும்போது, ஏதோ ஞாபகமாக சிக்னலைக் கவனிக்காமல் அவர் பைக்கை ஓட்ட, குறுக்கே வந்த தண்ணீர் லாரி அவர் மீது உரசிவிட்டுச் சென்றது. பைக் அவர் கட்டுப்பாட்டை இழந்து ஒரு கம்பத்தில் மோதி கீழே விழுந்தது. அவரும் விழுந்தார்.

பலரும் கூட்டமாக நின்று வேடிக்கை பார்க்க, ஒருவர் ஓடிவந்து அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து, தூக்கி மடியில் வைத்துக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தார். அவர் வேறு யாருமில்லை, யாசகம் கேட்ட அந்தப் பிச்சைக்காரர்தான். கூட்டத்திலிருந்த ஒருவர் அவரை ஆட்டோவில் கைத்தாங்கலாகத் தூக்கி உட்காரவைத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அவர் வேறு யாருமில்லை, காலையில் அவரிடம் பைக்கில் லிஃப்ட் கேட்டவர்தான். மருத்துவமனைக்குச் சென்றதும் மருத்துவர் ஒருவர் வந்து அவருக்கு இலவசமாகச் சிகிச்சை அளித்தார். அந்த மருத்துவர் வேறு யாருமில்லை... பைக்கை காரில் மோதி ஒரு பெரியவரிடம் சண்டை போட்டாரே, அந்தப் பெரியவர்தான்.

நாம் உதவி செய்யாவிட்டாலும் நமக்கு உதவி கிடைக்கும். ஆனால், வாழ்க்கையில் எல்லோரையும் மதித்து நடக்க வேண்டும், அறிமுகம் இல்லாதவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும், யாரையும் தாழ்வாக நினைக்கக்கூடாது என்கிற பாடங்களை அன்று அந்த பைக் மனிதர் கற்றார்.





# இலங்கையில் அறிவுத் திருக்கோயில் திறப்பு விழா!

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம், இந்தியாவைக் கடந்து பல நாடுகளிலும் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில், உலக சமுதாய சேவா சங்கத்தின் கொழும்பு மண்டலத்தில் இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, தலைநகர் கொழும்புவில் அறிவுத் திருக்கோயிலை அமைத்துள்ளது. இதன் திறப்புவிழா 27.08.2023 அன்று நடைபெற்றது. உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ திரு. SKM மயிலானந்தன் அவர்கள் அறிவுத்திருக்கோயிலைத் திறந்து வைத்தார். உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள், விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்.



# மனைவி நல வேட்பு விழாவில் ராம்ராஜ்!

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 30–ம் தேதி, மனைவி நல வேட்பு விழா கொண்டாடும் வழக்கத்தை உருவாக்கினார். அன்றைய நாளில் தம்பதிகள் பரஸ்பரம் தங்களுக்குள் மலர், கனிகளை பறிமாறிக்கொண்டு உயிர்க்கலப்பு தவத்தை மேற்கொள்வர். அன்புப் பறிமாற்றம் நிகழும் ‘மனைவி நல வேட்பு விழா’ இந்த ஆண்டும் ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் கொண்டாடப்பட்டது. சாகித்திய அகாடமி விருதுபெற்ற கவிஞர் ‘சிற்பி’ திரு.பாலசுப்ரமணியம் தலைமை வகித்தார்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள், வரவேற்புரையாற்றினார். சமீபத்தில் வெளியான ‘இறுகப்பற்று’ குறும்படத்தின் காட்சி ஒன்றைத் திரையிட்டு அவர் பேசினார். தம்பதிகளிடம் 21 கேள்விகள் கேட்டு, அவர்களிடம் இருக்கும் இடைவெளியை உணர்த்தும் காட்சி அது. ‘முதன்முதலில் சந்தித்த தேதி நினைவிருக்கிறதா’, ‘கடந்த 30 நாட்களில் உங்கள் வாழ்க்கைத்துணையைப் பாராட்டினீர்களா’, ‘மரியாதைக்குறைவாகப் பேசினீர்களா’, ‘தினமும் ஒரு வேளையாவது ஒன்றாக அமர்ந்து சாப்பிடுகிறீர்களா’ என்பது போன்ற கேள்விகள். “தாங்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதாக நினைக்கும் தம்பதிகளுக்குள் கூட இடைவெளி இருப்பதை இந்தச் சமூகப் பரிசோதனை உணர்த்தியது. அன்பும் மரியாதையும் காட்டி வாழ்க்கைத்துணையைப் புரிந்துகொண்டால்தான் நெருக்கம் கூடும்’’ என்றார் திரு. கே.ஆர்.நாகராஜன்.

முன்னாள் தமிழகத் தலைமைச் செயலாளர் திரு. வெ.இறையன்பு அவர்கள் சிறப்புரையாற்றினார். “கூட்டுக்குடும்பங்கள் குறைந்து தனிக்குடும்பங்கள் அதிகரித்தன. இப்போது ஒரே வீட்டில் கணவனும் மனைவியும் பேசிக்கொள்ளாமல் பிரிந்து வாழ்கின்றனர். இதனால் குழந்தைகளின் வளர்ச்சி பாதிக்கிறது. பேசாமலேயே புரிந்துகொள்ளும் அளவுக்குக் கணவனும் மனைவியும் இருந்தால் குடும்பம் தளிர்க்கும்” என்றார் அவர். ஆழியாறு அறிவுத் திருக்கோயில் துணைத்தலைவர் திரு. சின்னசாமி அவர்கள் நன்றி கூறினார்.




# ‘குறள் 100’ திரையிடல் நிகழ்வில் ராம்ராஜ்!

திரைக்கலைஞர் திரு. சிவகுமார் அவர்களின் ‘குறள் 100’ திரையிடல் நிகழ்வு, திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் உள்ள வனாலயத்தில் நடைபெற்றது. வள்ளுவர் காட்டிய நெறிப்படி வாழ்ந்த, வாழும் 100 மனிதர்களையும், அவர்களைப் பற்றிய குறள்களையும் கொண்ட நீண்ட சொற்பொழிவு இது. இதைத் திரையிட்டு, பெண்களின் பெருமை பற்றி திரு. சிவகுமார் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் கௌரவத் தலைவர் டாக்டர் A.சக்திவேல் அவர்கள், வனம் இந்தியா பவுண்டேஷன் கௌரவத் தலைவர் திரு. K.பாலசுப்பிரமணியம் அவர்கள், செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் அவர்கள் உள்படப் பலரும் பங்கேற்றனர். ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள், திரைக்கலைஞர் திரு. சிவகுமார் அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

# தென்னை நிறுவன நிகழ்வில் ராம்ராஜ்!

உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் நான்காம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம், திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் உள்ள வனாலயத்தில் நடைபெற்றது. தென்னை உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான சந்தை நிலவரம், விற்பனை வாய்ப்புகள் பற்றிய அனுபவ உரைகள், ஆலோசனைகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. நிறுவனத்தின் தலைவர் டாக்டர் A.சக்திவேல் அவர்கள், நிர்வாக இயக்குநர் திரு. K.பாலசுப்பிரமணியம் அவர்கள், இணை நிர்வாக இயக்குநர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் அவர்கள் உள்பட நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர். நிறுவனத்தின் இயக்குநரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள், விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவித்தார்.





# மேன்மையின் அடையாளங்கள் இவைதான்!

மருத்துவமனையின் அவசரச் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார் ஒரு முதியவர். மூன்று வாரங்களாக அவர் சிகிச்சையில் இருந்தாலும், அவரைக் காண அவருடைய குடும்பத்தினர் என்று யாருமே வரவில்லை. நினைவிழந்த நிலையில் இருக்கும் அவரை அக்கம்பக்கத்தினர் கூட்டிவந்து மருத்துவமனையில் சேர்த்தனர் என்று சொல்லப்பட்டது.

யாருமே அவரைப் பார்க்க வராத நிலையில், ஒரு புறா மட்டும் தினமும் வந்து அந்த முதியவர் படுத்திருந்த படுக்கைக்கு அருகே இருக்கும் ஜன்னலின் வெளிப்புறத்தில் அமர்ந்து அவரையே ஏக்கத்துடன் பார்க்கும், குரல் எழுப்பும். தொடர்ந்து மூன்று நாட்கள் இதைக் கவனித்த நர்ஸ், ஏ.சி அறையாக இருந்தாலும் பரவாயில்லை என்று ஜன்னலைக் கொஞ்சம் திறந்துவிட்டார். அதற்காகவே காத்திருந்ததைப் போல உடனே அந்தப் புறா பறந்து உள்ளே வந்து அந்த முதியவரின் மேல் அமர்ந்தது. குரல் எழுப்பியபடியே, அவர் கண் திறக்கிறாரா என்று கவனித்தது. நீண்ட நேரம் அது கத்திப் பார்த்தும் அவர் கண் திறக்கவில்லை. சிறிது நேரம் அமர்ந்திருந்துவிட்டுப் புறா பறந்து போனது.

அதன் பிறகும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அந்தப் புறா வந்து ஜன்னலோரம் அமர்வதும், நர்ஸ்கள் ஜன்னலைத் திறந்து விடுவதும், புறா உள்ளேவந்து முதியவர் மீது உட்கார்ந்து குரல் கொடுத்துப் பார்ப்பதும் வழக்கமானது. ஒரு வாரம் கழித்து, புறா இப்படிக் குரல் கொடுத்தபோது அந்த முதியவர் கண்விழித்துப் பார்த்தார். அது மகிழ்ச்சியில் அறை முழுக்கச் சிறகடித்துப் பறந்து குரல் எழுப்ப, அவர் உதடுகளில் லேசான புன்னகை. திரும்பவும் அவர் மயக்கநிலைக்குப் போய்விட்டார்.

மருந்துகளால் அவருக்கு நினைவு திரும்ப வைக்கமுடியாத நிலையில், புறாவின் குரல் கேட்டு அவர் கண்விழித்தது டாக்டர்களுக்கே ஆச்சர்யம் தந்தது. அந்த முதியவரின் முகவரிக்கே ஒருவரை அனுப்பி விசாரித்தார்கள். அப்போதுதான் உண்மை தெரியவந்தது. குடும்பத்தினர் யாருமின்றித் தனிமையில் வாழ்ந்துவந்த அந்த முதியவர், தினந்தோறும் காலை மாலை வேளைகளில் அங்கு சுற்றித் திரியும் புறாக்கூட்டத்திற்கு உணவும் தண்ணீரும் வைத்து வருவது வழக்கம். அந்தக் கூட்டத்துப் புறாக்களில் ஒன்றுதான் அவரை மருத்துவமனைக்குக் கூட்டிவந்த நாளில் பின்தொடர்ந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவரைத் தேடி மருத்துவமனைக்கு வந்து சென்றுள்ளது.

இது சவூதி அரேபியாவில் நடந்த உண்மைச் சம்பவம். மனிதர்களைத் தாண்டி ஐந்தறிவு ஜீவன்களைக்கூட ஒருவர் தன் நல்லியல்புகளால் ஈர்க்க முடியும். ஆனால், நல்லவர்கள் போல நடிப்பவர்களுக்கு அது சாத்தியமில்லை. நடிப்பால் மனிதர்களைக்கூட ஏமாற்றிவிடலாம். ஆனால், ஐந்தறிவு உயிர்கள் அந்த நடிப்பைக் கண்டுபிடித்துவிடும்.

**அப்படிப்பட்ட மேன்மையான மனிதர்களை அடையாளம் காண்பது எப்படி?**

● மேன்மையானவர்கள் தங்களையும் மதிப்பார்கள், அடுத்தவர்களையும் மதிப்பார்கள். உங்கள் தோற்றம், உங்கள் பழக்கவழக்கங்கள், நீங்கள் எடுக்கும் முடிவுகள், செய்யும் செயல்கள், மேற்கொள்ளும் தொழில் ஆகியவற்றை வைத்து உங்களை விமர்சனம் செய்யவோ, சிறுமைப்படுத்தவோ மாட்டார்கள்.

● உங்களை நம்பும், உங்கள் உறவை மதிக்கும் அவர்கள், எப்போதும் உங்களிடம் நேர்மையாக நடப்பார்கள். முக்கியமான விஷயங்களில் உங்களிடம் பொய் சொல்ல மாட்டார்கள். உங்களிடம் மட்டுமில்லை, யாரிடமும் பொய் சொல்ல மாட்டார்கள். பள்ளிக்கால நண்பர்களுடன் இன்னமும் அவர்கள் தொடர்பில் இருப்பார்கள். ஏனெனில், நம்பிக்கையான உறவுகள்தான் நீடிக்கும்.

● ஆடம்பரங்களுக்கோ, விலையுயர்ந்த பரிசுகளுக்கோ மயங்க மாட்டார்கள். தகுதியை வைத்து நண்பர்களைப் பிரித்துப் பார்க்க மாட்டார்கள். ஏழையோ, பணக்காரரோ, மனப்பூர்வமாக எந்த வித்தியாசமும் இல்லாமல் பழகுவார்கள். அன்பு மட்டுமே அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கும்.

● அவர்களிடம் தற்பெருமை இருக்காது. தங்களிடம் இல்லாத ஒரு திறமை அல்லது தகுதியை, இருப்பது போலக் காண்பித்து ஏமாற்ற மாட்டார்கள். சமூக அந்தஸ்துக்காகப் போலியான ஆடம்பரங்களை வெளிப்படுத்த மாட்டார்கள்.

● எப்போதும் எதிர்மறையாகப் பேசும் மனிதர்களை அவர்கள் அருகில் சேர்க்க மாட்டார்கள். எதைக் கண்டும் அவர்கள் பயப்பட மாட்டார்கள். தங்கள் மனத்தில் நினைப்பதை வெளிப்படையாகச் சொல்வார்கள்.


● அவர்கள் வெற்றிகரமான மனிதர்களாக இருப்பார்கள். சுதந்திரமான சிந்தனை கொண்டிருப்பார்கள். 'குறிப்பிட்ட ஒரு பிரிவினருடன்தான் இவர் இருப்பார்' என்பது போன்ற அடையாளங்கள் தங்கள் மீது விழுந்து விடாதபடிக் கவனமாக இருப்பார்கள்.

● குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள். தங்கள் குடும்பத்துக்கு மதிப்பு கொடுக்கும் அதே நேரத்தில், ஒருவரை நலம் விசாரிக்கும்போதும் அவர்கள் குடும்பத்தினரின் நலனை அக்கறையுடன் கேட்பார்கள்.

● மகிழ்ச்சியான, வசதியான நேரங்களில் சில நண்பர்கள் உடன் இருப்பார்கள். பிரச்னைகள் வரும்போது காணாமல் போவார்கள். ஆனால், மேன்மை மனிதர்கள் அப்படி இல்லை. நெருக்கடியான நேரங்களில், சாய்ந்துகொள்ள தோள் தேவைப்படும் துன்பச்சூழல்களில் அவர்கள்தான் பக்கத்தில் இருப்பார்கள். தங்கள் வேலைகளை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு இதற்காக ஓடிவருவார்கள்.

● அவர்களுக்குப் பொறாமை உணர்வு இருக்காது. நண்பர்களின் சாதனைகளை மனதாரப் பாராட்டுவார்கள். முதுகுக்குப் பின்னால் யாரைப் பற்றியும் தவறாகப் பேச மாட்டார்கள். சின்னச்சின்னப் பிரச்னைகளைப் பெரிதுபடுத்திச் சண்டை போட மாட்டார்கள். அடுத்தவர்கள் சொல்வதை வைத்து உங்களைத் தவறாக மதிப்பிட மாட்டார்கள். ●

# வாசகர் கடிதங்கள்!



'அன்பாசிரியர் விருது' பெற்ற எங்களை கௌரவிக்கும்விதமாக வெளியான தங்களின் 'வெண்மை' அன்பாசிரியர் சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மேலும் எங்களுடைய பணி சிறக்க உங்களுடைய ஆசீர்வாதங்களுடன் வந்திருந்தது இதழ். எங்கள் வாழ்க்கை மேலும் சிறக்க உறுதிகொள்ளவைக்கும் தங்களின் இந்தச் சேவைக்கு நன்றி.

*– போ.சந்திரசேகரன்,*
*அரசு மேல்நிலைப்பள்ளி, அவளூர்,*
*காஞ்சிபுரம் மாவட்டம்.*

'இந்து தமிழ் திசை' நாளிதழுடன் இணைந்து ராம்ராஜ் காட்டன் வழங்கி வரும் அன்பாசிரியர் விருது 2022 கிடைக்கப்பெற்றதில் பெரும் மகிழ்ச்சி. ஆசிரியர் தினத்தன்று தங்களின் 'வெண்மை' அன்பாசிரியர் சிறப்பிதழ் பரிசாகக் கிடைக்கப்பெற்றதில் கூடுதல் மகிழ்ச்சி. என் ஆசிரியர் நண்பர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டேன். வணிகவியல் பாடம் நடத்தும்போது, ராம்ராஜ் காட்டனின் வெற்றிக் கதையை எமது மாணவர்களுக்கு அடிக்கடி சொல்வதுண்டு. மிதிவண்டியில் வைத்து வியாபாரம் செய்யத் தொடங்கி, இன்று எண்ணற்ற நெசவாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வளித்து, பார்போற்றும் நிறுவனமாக நீங்கள் உருவெடுத்து இருப்பது மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் ஒரு முன்மாதிரி. வளர்க உங்கள் நிறுவனத்தின் வெற்றி! தொடர்க தங்களின் நற்செயல்கள்!!

*– ப.கார்த்திகேயன்,*
*அரசு மேல்நிலைப்பள்ளி, ஈசநத்தம்,*
*கரூர் மாவட்டம்.*



## மதிப்பு தெரியாது!

ஒருவர் தனது விலையுயர்ந்த காரை வீட்டின் முன்பாக வீதியில் நிறுத்தியிருந்தார். அந்த வழியாகச் சென்ற தெருநாய் ஒன்று அதன் சக்கரத்தில் சிறுநீர் கழித்தது. கார் உரிமையாளர் அதைப் பார்த்து சிரித்தார். அவர் நண்பர் பதறி, "ஒரு கோடி ரூபாய் கார்ல அது அசிங்கம் பண்ணுது. பார்த்துட்டுச் சிரிக்கறீங்களே?" என்றார்.

கார் உரிமையாளர் அமைதியாக விளக்கம் சொன்னார். "தெருநாய் தன் அறிவுக்கு எட்டியதைச் செய்கிறது. அதற்கு இந்தக் காரின் மதிப்பு தெரியாது, சொன்னாலும் அதற்குப் புரியாது. இப்படித்தான் வாழ்விலும் உங்கள் மதிப்பை அறியாதவர்கள் உங்களை அவமானப்படுத்துவார்கள், கேலி செய்வார்கள். அவர்களைப் புன்னகையுடன் கடந்து செல்லுங்கள். கண்டுகொள்ளாதீர்கள்!"

## அதிர்ச்சி பாடம்!

ஒரு நிறுவனம் கடுமையான நஷ்டத்தில் இருக்க, அதைச் சரிசெய்யும்விதமாக உற்பத்தியை அதிகரிப்பதிலும், செலவுகளைக் குறைப்பதிலும் யாரும் ஆர்வம் காட்டவில்லை. கவலைப்பட்ட முதலாளி, ஆலோசகர் ஒருவரின் உதவி கேட்டார். அந்த ஆலோசகர் வந்து, நிறுவனத்தின் ஊழியர்களையும் அலுவலர்களையும் கூப்பிட்டுக் கூட்டம் போட்டு, பங்குச்சந்தையில் முதலீடு செய்வது பற்றிப் பாடம் எடுத்தார். அடுத்த நான்கு வாரங்களுக்குப் பங்குச்சந்தை வகுப்பு தொடர்ந்தது. ஒரு நிறுவனத்தின் வரவு – செலவுக் கணக்கைப் பார்த்து, அதன் பங்கை வாங்கலாமா, வேண்டாமா என்று முடிவு செய்வதில் எல்லோரும் தேறிவிட்டனர்.

ஆலோசகர் அவர்களுக்கு ஒரு நிறுவனத்தின் கணக்குகளைக் காட்டினார். "நஷ்டத்தில் இயங்கும் இந்த நிறுவனம் மூடப்படும் அபாயத்தில் உள்ளது. இதன் பங்குகளை வாங்கக்கூடாது" என்று எல்லோரும் சொன்னார்கள். "துரதிர்ஷ்டவசமாக இது நீங்கள் வேலை பார்க்கும் இந்த நிறுவனத்தின் வரவு – செலவுக் கணக்கு. இதை மூடினால் உங்கள் எதிர்காலம் இருண்டுவிடும். நிறுவனத்தை மூடாமல் இருக்க என்ன வழி என்று பார்க்கலாமா?" என்று கேட்டார் ஆலோசகர். அதன்பின் எல்லாமே மாறியது.





## உள்ளே இருக்கிறது!

சாக்ரடீஸிடம் ஒரு ஜோசியர் வந்தார். "ஒருவரின் தோற்றத்தைப் பார்த்தே அவர் எப்படிப்பட்டவர் என்று என்னால் சொல்ல முடியும்" என்றார். "உங்கள் மூக்கைப் பார்த்தால் கோபக்காரர் மாதிரி தெரிகிறது. தலையைப் பார்த்தால் பேராசைக்காரர் தோற்றம் இருக்கிறது. தாடையைப் பார்த்தால் விஷமத்தனம் தெரிகிறது. வாயின் அமைப்பைப் பார்த்தால் பொறாமைக்காரர் என நினைக்கிறேன்" என்று சாக்ரடீஸை அவர் கணிக்க, சீடர்கள் கோபத்தில் கொந்தளித்தனர். ஆனால் ஜோசியருக்குத் தட்சணை கொடுத்து அனுப்பினார் சாக்ரடீஸ். புரியாமல் பார்த்த சீடர்களிடம், "அவர் சொன்னது எல்லாமே ஓரளவு உண்மைதான். ஆனால், இந்த எல்லா எதிர்மறைக் குணங்களையும் கட்டுப்படுத்தும் மனம் எனக்கு இருக்கிறது என்பதை அவர் சொல்லவில்லை" என்றார் சாக்ரடீஸ். அந்த மனமே அவரை மேன்மையாக்கியது.

## புண்ணியக் கணக்கு!



ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வெளியில் வந்த சுந்தர், ஆட்டோ பிடித்தார். போக வேண்டிய இடத்தைச் சொன்னார். "போய் உடனே திரும்பிவந்து அடுத்த ரயில்ல ஊருக்குப் போகணும்" என்றார். ஆட்டோக்காரர் 500 ரூபாய் கேட்க, இவர் 300 தருவதாகச் சொன்னார். சற்று யோசித்த ஆட்டோ டிரைவர், "சரி, 400 ரூபாய் கொடுங்க" என்று பேரத்தை முடித்து ஆட்டோவை எடுத்தார்.

வழியிலேயே சுந்தருக்குப் பசித்தது. ரோட்டோரக் கடையில் ஆட்டோவை நிறுத்தச் சொன்னார். ஆட்டோ டிரைவரையும் சாப்பிடக் கூப்பிட்டார். கணவரை இழந்த ஒரு கைம்பெண் இட்லி விற்றுப் பிழைப்பு நடத்தும் கடை. இருவரும் இட்லி, தோசை சாப்பிட்டனர். சுத்தமான சுவையான டிபன். "எவ்வளவு?" என்றார் சுந்தர். 70 ரூபாய் கணக்கு சொல்ல, சுந்தர் 200 ரூபாய் நோட்டை நீட்டினார். "இன்னைக்கு வியாபாரம் ரொம்ப டல்லா இருக்கு சார், சில்லரை இருக்காதே" என்று அந்த அம்மா தயங்க, "நாளைக்கு இந்தப் பக்கமா வருவேன். அப்ப வாங்கிக்கறேன்" என்றார் சுந்தர்.

"சார், இன்னைக்கே ஊருக்குப் போறேன்னு என்கிட்ட சொன்னீங்க. அந்த அம்மாகிட்ட நாளைக்கு வந்து சில்லரை வாங்கறேன்னு சொல்றீங்களே?" என்று ஆட்டோ டிரைவர் கேட்டார். "தம்பி, இங்க நாம சாப்பிட்டதை ஹோட்டல்ல சாப்பிட்டா 200 ரூபாய் ஆகியிருக்கும். அப்படி நினைச்சு கொடுத்துட்டேன். இன்னைக்கு வியாபாரம் சரியா இல்லாம அவங்க கஷ்டத்துல இருப்பாங்க இல்லையா? அந்த அம்மாவுக்கு நம்மால முடிஞ்ச உதவி" என்றார் சுந்தர்.

பயணம் முடிந்ததும் சுந்தர் 400 ரூபாய் கொடுக்க, ஆட்டோக்காரர் 100 ரூபாயைத் திரும்பக் கொடுத்தார். "300 ரூபாயே போதும் சார். இந்த 100 ரூபாய் உங்ககிட்ட இருந்தா, அந்த இட்லிக்கார அம்மா மாதிரி யாருக்காவது உதவி செய்வீங்க. உங்க புண்ணியக்கணக்குல என் பங்கும் இருக்கட்டும் சார்" என்று கும்பிட்டார். மேன்மக்கள் உருவாகியபடி இருக்கிறார்கள்.

## நாளை என்பதே கிடையாது!

ஓர் இளைஞன் வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே இரவு வேலை முடிய ரொம்ப தாமதமாகிவிட்டது. அவனைத் தன் காரில் கூட்டிப் போனார் மேனேஜர். அவர் வீட்டைத் தாண்டி ஐந்து கிலோமீட்டர் தள்ளி அவன் வீடு இருந்தது. "என்னால் உங்களுக்குச் சிரமம். நான் சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடுவேன். நீங்கள் திரும்பிவந்து தூங்குவதற்குத் தாமதமாகும்" என்றான் இளைஞன். "நான் போய் உடனே தூங்கமாட்டேன். எனக்குப் படிக்க வேண்டியது கொஞ்சம் இருக்கிறது" என்றார் மேனேஜர். "என்ன சொல்றீங்க?" என்று அவன் திகைத்தான்.



"ஆமாம், இன்று செய்த வேலையில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. அதைத் தெளிவுபடுத்திக்கொள்ள நான் படிக்க வேண்டும். அப்போதுதான் தூக்கம் வரும். நிறைய பேர் எல்லாவற்றையும் நாளைக்கு என்று தள்ளி வைக்கிறார்கள். 'இந்த வேலையை நாளை முடிக்கலாம்', 'அடுத்த வாரத்திலிருந்து வாக்கிங் போகலாம்', 'அடுத்த மாதம் ஜெர்மன் மொழி கோர்ஸில் சேரலாம்' என்றெல்லாம் தீர்மானம் செய்கிறவர்கள், எப்போதும் நாளையில் வாழ்கிறார்கள். இன்றைய நாளை அவர்கள் வாழ்வதே இல்லை. எவ்வளவு சோர்வாக இருந்தாலும், நான் எதையும் நாளைக்குத் தள்ளிப் போட மாட்டேன். நான் இன்றைய நாளில் வாழ்பவன்" என்றார் மேனேஜர்.

அந்த இளைஞன் ஒரு புதிய பாடத்தை அன்று கற்றான்.



# மென்மையும் மேன்மையும்!

மேன்மையான மனிதர்கள் எல்லோரிடமும் மென்மையான குணம் இருக்கும். அதைத் தாண்டி வேறு என்னென்ன பண்புகள் அவர்களிடம் இருக்கும் என்பதை அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம், வாருங்கள்:

- எல்லோரும் சொல்லும் கருத்துகளை அவர்கள் திறந்த மனத்துடன் அணுகுவார்கள். ‘இவர் இந்தக் காரணத்துக்காகவே இப்படிச் சொல்கிறார்’ என்று எதற்கும் உள்நோக்கம் கற்பிக்க மாட்டார்கள்.
- வாழ்வில் எல்லா விஷயங்களையும் நேர்மறையான பார்வையுடன் அணுகுவார்கள். என்ன விஷயம் நடந்தாலும், அதில் இருக்கும் நல்ல அம்சங்களையே அவர்கள் கவனிப்பார்கள். கடினமான தருணங்களிலும், அந்தப் பிரச்னையின் வலியைத் தன் மனதுக்குள் தாங்கிக்கொண்டு, அடுத்தவர்களுக்கு எந்தப் பிரச்னையும் வராமல் தவிர்க்க என்ன வழி என்றே யோசிப்பார்கள்.
- புகழ் வெளிச்சமும் கவனமும் எப்போதும் தங்கள் மீது மட்டும்தான் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட மாட்டார்கள். அடுத்தவர்களும் கவனம் பெறுவதற்கான வாய்ப்பைக் கொடுத்து ஒதுங்கி நிற்பார்கள்.
- தாங்கள் பேசுவதைவிட, மற்றவர்களின் பேச்சுக்களைக் கேட்பதற்கு முன்னுரிமை கொடுப்பார்கள். அடுத்தவர்களின் எண்ணங்களையும், அவர்கள் சொல்லும் கருத்துகளையும் மதிப்பார்கள்.
- தன்னை எல்லோரும் விரும்ப வேண்டும் என்பதற்காகச் சிலர் ஒவ்வோர் இடத்துக்கும் ஏற்றபடி நடிப்பார்கள், தங்கள் இயல்பை மாற்றிக்கொள்வார்கள். மேன்மையான மனிதர்கள் அப்படி இல்லை. கருத்து வேறுபாடுகளையும், அடுத்தவர்களின் செயல்களில் தாங்கள் முரண்படுவதையும் மென்மையான வார்த்தைகளால் சொல்லிவிடுவார்கள்.
- நிபந்தனையற்ற அன்பைப் பொழிவார்கள். அவர்களிடம் அளவு கடந்த பொறுமை இருக்கும், எல்லையற்ற கருணையை வெளிப்படுத்துவார்கள், எல்லா மனிதர்களிடமும் பிரியம் காட்டுவார்கள்.
- அவர்கள் பேசும் சொற்களுக்கும் செய்யும் செயல்களுக்கும் வித்தியாசம் இருக்காது. அடுத்தவர்களுக்கு அறிவுரையாக என்ன சொல்கிறார்களோ, அதன்படியே அவர்கள் நேர்மையாக வாழ்வார்கள்.
- சொன்ன சொல்லைக் காப்பாற்றுவார்கள். யாருக்கும் நம்பிக்கை வார்த்தைகளில் வாக்குறுதி கொடுத்துவிட்டு, பிறகு ஏமாற்ற மாட்டார்கள். யாரையும் முதுகில் குத்தவும் மாட்டார்கள்.
- ஒரு பிரச்னை வரும்போது, “உங்களின் செயலால் நான் பாதிக்கப்பட்டேன்” என்று அடுத்தவர்களைக் குற்றம் சொல்லமாட்டார்கள். ‘இந்தப் பிரச்னைக்கு நான் எந்த வகையில் காரணம்’ என்று ஆராய்ந்து சரிசெய்துகொள்ள முயல்வார்கள்.
- ரகசியம் என்று அவர்களை நம்பிச் சொல்லும் விஷயங்களை எந்தச் சூழலிலும் யாரிடமும் பகிரங்கப்படுத்த மாட்டார்கள்.
- ஒரு நண்பர்கள் அல்லது உறவினர்கள் கூட்டத்துடன் எங்காவது போகும்போது, அவர்களுக்குப் பசிக்கிறதா, வேறு ஏதாவது தேவை இருக்கிறதா, அவர்கள் எல்லோரும் பாதுகாப்பாக இருக்கிறார்களா என்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்வார்கள்.
- தனக்காக என்னென்ன வேண்டும் என்று பார்க்காமல், அடுத்தவர்களின் தேவைகள் என்னென்ன என்று பார்ப்பதே மேன்மையான மனிதர்களின் முதல் வேலையாக இருக்கும்.
- தங்களைப் பற்றிய நேர்மையான விமர்சனங்களையும், நண்பர்களின் கிண்டல்களையும் உறவுகளின் நேசமான கேலிப்பேச்சுகளையும் சிரித்த முகத்துடன் எதிர்கொள்வார்கள். ●

# கொண்டாடுவோம் வேட்டி அணியும் விழா!




குடும்ப உறவுகள் அனைவரும் ஒன்றுகூடும் விதமாகப் பாரம்பரியப் பண்பாட்டு விழாக்கள் பலவற்றை நாம் கொண்டாடுகிறோம். குழந்தை பிறந்ததும் பெயர் சூட்டும் விழா, குழந்தையைத் தொட்டிலில் போடுவதற்கு ஒரு விழா, காதணி விழா, பெண் குழந்தைகளாக இருந்தால் பூப்புனித நீராட்டு விழா, திருமண நிச்சயதார்த்தம், திருமணம், வளைகாப்பு, பேரக்குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விழா, 60–ம் கல்யாணம், 80–ம் கல்யாணம், சதாபிஷேகம் இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த வயதிற்கு ஏற்றாற்போல் பல விழாக்களைக் கொண்டாடி வருகிறோம்.

ஒருவரால் அனைத்து உறவினர்களையும் தனித்தனியாகச் சந்திப்பது சாத்தியமில்லை. அனைத்து உறவினர்களும் ஒரே இடத்தில் கூடும்பொழுது, பல நதிகள் ஒரே இடத்தில் சங்கமம் ஆவது போல அந்த இடத்தில் மகிழ்ச்சி மிக அதிகமாக இருக்கும். அனைவரையும் ஒரே இடத்தில் பார்ப்பது மிகப்பெரிய சந்தோஷம் அல்லவா! அதற்காகவே குடும்ப விழாக்களை ஏற்பாடு செய்தார்கள். இந்த விழாக்களின் முதல் நோக்கம், உறவுகளை மேம்படுத்துவது. இரண்டாவது நோக்கம், நமது பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றை அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் உணர்த்தவும், மேம்படுத்தவும், வளர்க்கவும் வேண்டும்.

அந்தப் பண்பாட்டு விழாக்களின் அடுத்த படித்தளமாகத் தற்போது தமிழ்நாட்டில் 'வேட்டி அணியும் விழா' கொண்டாடத் தொடங்கியிருக்கிறார்கள். இது ஏற்கனவே ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் கொண்டாடும் விழாதான். நம் தமிழ்நாட்டில் தற்போதுதான் ஆரம்பித்திருக்கிறார்கள்.

அதாவது பதின்பருவத்தை எட்டும்பொழுது பெண் குழந்தைகளுக்குப் பூப்புனித நீராட்டு விழா நடத்துவோம். ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு அப்படி எதுவும் நடத்துவது கிடையாது. அதற்காகவே ஆந்திரா, தெலங்கானாவில் ஆண் குழந்தைகள் வளரும்போது அவர்களுக்கு 'வேட்டி அணியும் விழா' என்று ஒரு விழாவைப் பிரபலமாக அனைத்து ஊர்களிலும் நடத்தி வருகிறார்கள். ஆண் பிள்ளைகள் 13 – 14 வயதை நெருங்கினால், வேட்டி கட்டுவது எப்படி என்பதைச் சொல்லித் தருவதுதான் 'வேட்டி அணியும் விழா'. குடும்பத்தில் தாத்தா – பாட்டி, பெரியப்பா, சித்தப்பா, அண்ணன்கள் என்று எல்லா உறவுகளும் சேர்ந்து அதை ஒரு விழாவாகக் கொண்டாடுகிறார்கள். குழந்தைக்கு உறவுகள் புனித நீராட்ட, தாய்மாமன் சீராகக் கொண்டுவரும் வேட்டியை அணிவிக்கிறார்கள். வேட்டி அணியும் விழா கொண்டாடுவோரின் விருப்பத் தேர்வாக ராம்ராஜ் காட்டன் வேட்டிகள் இருக்கின்றன. இந்தப் பண்பாட்டு விழா இப்போது தமிழ்நாட்டிலும் பெரிதாகப் பிரபலமாகி வருகிறது. நம் பாரம்பரிய உடையின் பெருமையைக் குழந்தைகளுக்கு உணர்த்தவும், பண்பாடு மறக்காமல் அவர்களைக் கொண்டாடி வளர்க்கவும் 'வேட்டி அணியும் விழா' உதவும்.

பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் போன்றவற்றை வளர்ந்த பிறகு சொல்லிக் கொடுப்பதைவிட, வளரக்கூடிய பருவத்திலேயே சொல்லிக் கொடுத்தால், அது குழந்தைகள் மனதில் ஆணித்தரமாகப் பதியும். வாய்ப்பிருக்கிறவர்கள் அவர்களின் வசதிக்குத் தகுந்தாற்போல இந்த விழாவைக் கொண்டாட ஆரம்பிக்கலாம். வளரும் தலைமுறையை வளமாக்குவோம்; பாரம்பரியத்தைப் பறைசாற்றுவோம்.





# பணத்தால் மாறாத பெருந்தன்மை!

லாட்டரி சீட்டின் தீமைகள் பற்றி நிறைய பேசுவதுண்டு. முதல்முறையாக அது ஒரு நல்ல விஷயத்தை வெளிப்படுத்தியுள்ளது. காரணம், அந்தப் பரிசைப் பெற்ற எளிய மனிதர்களும், அவர்கள் தங்களுக்குள் அதைப் பகிர்ந்துகொண்ட விதமும்!

கேரள அரசு சமீபத்தில் வெளியிட்ட மழைக்கால பம்பர் லாட்டரிச் சீட்டுக்கான முதல் பரிசுத் தொகை 10 கோடி ரூபாய். ஒரு லாட்டரி சீட்டின் விலை 250 ரூபாய். மலப்புரம் மாவட்டத்தில் உள்ள பரப்பனங்காடி நகராட்சியில் ஒப்பந்த முறையில் தூய்மைப் பணியாளராக வேலை பார்க்கும் 11 பெண்கள் இணைந்து வாங்கிய லாட்டரிச் சீட்டுக்கு முதல் பரிசு விழுந்தது. ஆம், 10 கோடி ரூபாயை இந்த 11 பெண்களும் பகிர்ந்துகொள்கிறார்கள். மாதம் வெறும் 7,500 ரூபாய் முதல் 14,000 ரூபாய் வரை சம்பளம் பெறும் எளிய பெண்களுக்கு லட்சங்களில் அதிர்ஷ்டம் வந்து கதவைத் தட்டினால் எப்படியெல்லாம் மாற முடியும்?!

ஆனால், எல்லோரும் சொந்த வீடு கட்டி, குழந்தைகளை நல்ல பள்ளியில் படிக்கவைத்து, கடன்களை எல்லாம் அடைத்துவிட்டு இயல்பாக வாழவே முடிவெடுத்தார்கள். தொடர்ந்து தங்கள் வேலையைச் செய்யவும் தீர்மானித்தார்கள். "நாங்கள் எதுவுமே இல்லாத நிலையில் இருந்தபோது இந்த நகராட்சி வேலைதான் எங்களுக்கு ஆதரவாக இருந்தது, இப்போதும் ஆதரவாக இருக்கிறது. எத்தனை லட்சங்கள் கிடைத்தாலும் இதை மறக்க முடியாது. இந்த வேலையை நாங்கள் பெருமையாக நினைக்கிறோம். அதனால் இதைத் தொடர்ந்து செய்வோம்" என்று மறுநாளே பணிக்கு வந்தார்கள்.

இந்த 11 பெண்களில் 62 வயது பேபியின் கதை நெகிழ்ச்சியானது. லாட்டரி சீட்டு வாங்குவதற்கான 250 ரூபாயில் 9 பெண்கள் தலா 25 ரூபாய் கொடுத்துவிட்டார்கள். பேபியும், அவர் உறவினரான குட்டிமாலு என்பவரும் மட்டுமே மிச்சமிருந்தார்கள். இருவருமாக சேர்ந்து 25 ரூபாய் தருவதாகவும், பரிசு விழுந்தால் பிரித்துக்கொள்ளலாம் என்றும் திட்டமிட்டார்கள். குட்டிமாலுவிடம் அதற்கான 12 ரூபாய் 50 காசுகூட இல்லை. பேபியே அவருக்கும் சேர்த்து பணம் கொடுத்தார். குட்டிமாலு அந்தக் கடனை அடைப்பதற்கு முன்பே லாட்டரியில் பரிசு விழுந்துவிட்டது. அரசு வரிகளைப் பிடித்தம் செய்தது போல 6.3 கோடி ரூபாய் பரிசுத் தொகை. மற்ற ஒன்பது பெண்களும் 63 லட்ச ரூபாய் பெற்றுக்கொள்ள, தனக்குக் கிடைத்த 63 லட்ச ரூபாயில் பாதியை குட்டிமாலுவுடன் பகிர்ந்துகொண்டார் பேபி.

பேபியின் வாழ்க்கை துயரங்கள் நிறைந்தது. அவர் மகனுக்கு 3 வயது இருக்கும்போதே கணவர் இறந்துவிட்டார். யார் துணையும் இல்லாமல், கூலி வேலை செய்து மகனை ஆளாக்கினார். இப்போது மகன், மருமகள், பேரக்குழந்தைகள் என ஐந்து பேர். மழையில் ஒழுகும் வீடு. கடந்த 2018 வெள்ளத்தின்போது அவர் வீடு மூழ்கியது. அந்தத் துயரிலிருந்து மீளாத வாழ்க்கை, கடன்கள் ஏராளம். இந்தச் சூழலிலும் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டிருக்கிறார்.

''உங்கள் உறவினருக்கும் நீங்கள்தானே பணம் கொடுத்தீர்கள்? பரிசு விழுந்தவுடன் அவர் மீது பொறாமை ஏற்பட்டதா?'' என்று கேட்டால் பேபி சிரிக்கிறார்.





“ஒருபோதும் எனக்குப் பொறாமை இல்லை. டீ குடிக்க பணம் குறைவாக இருந்தால், ஒரு டீ வாங்கி பங்கிட்டுக் கொள்வோம். சாப்பிட ஏதேனும் வாங்க பணம் குறைவாக இருந்தாலும், வாங்கிய சாப்பாட்டைப் பங்கிட்டுக் கொள்வோம். பணத்துக்கு கஷ்டப்பட்ட சூழ்நிலைகளில் இருவரும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து உதவி செய்து வாழ்ந்தோம்.

லாட்டரி சீட்டு விற்பவர் வந்தபோது என்னிடம் காசு இருந்தது, குட்டிமாலுவிடம் பணம் இல்லை. அதனால் அவளுக்கும் சேர்த்து நானே பணம் கொடுத்தேன். பரிசு விழுந்தால் பழசை மறக்கிறவர்கள் இருக்கலாம், பணத்தைக் கண்டால் உறவுகளை முறிப்பவர்கள் இருக்கலாம். என்னால் அது முடியாது. நான் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்தபோது எனக்குக் கைகொடுத்தவள் அவள்தான். அவளுடன் பரிசைப் பகிர்ந்துகொள்வதில் சந்தோஷம்தான்” என்கிறார் பேபி.

பேபி அதிகம் படிக்காதவராக இருக்கலாம், வசதி இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவரின் பெருந்தன்மை எல்லோருக்கும் பாடமாக இருக்கிறது. தொழில் செய்பவர்கள் பலரும் பணம் சம்பாதிக்கும்போது எல்லோரும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நிபுணர்கள் சொல்லும் பாடங்கள் இங்கே:

- நம் வெற்றிகளைச் சாதனைகளாக நினைக்கலாம். அதே சமயம், ஒரு குழுவில் இருக்கும் அடுத்தவர்களின் வெற்றிகளில் சந்தோஷப்பட வேண்டும். ஒருவருக்கு இன்னொருவர் உதவிகள் செய்து, அடுத்தவர்களின் வெற்றிக்காகத் தியாகங்கள் செய்து பரஸ்பரம் ஜெயிக்கும்போது கிடைக்கும் மனநிறைவு பெரியது.

- ஒரு தொழில் என்பது, மக்களின் ஏதோ ஒரு தேவையை நிறைவு செய்வதோ, அல்லது ஒரு பிரச்னைக்குத் தீர்வு தருவதோதான். ஒரு தொழிலைச் செய்பவர் தன் பார்வையில் மட்டுமே எல்லாவற்றையும் பார்க்காமல், அடுத்தவர்களின் கண்ணோட்டத்திலும் பார்க்க வேண்டும். வாடிக்கையாளர், தொழிலாளர்கள் என்று எல்லோரது பார்வையும் தொழில் செய்யும் ஒருவருக்கு வேண்டும்.

- எதிர்காலம் எப்படி மாறும் என்பதைக் கணிக்கத் தெரிய வேண்டும். புதுப்புது அனுபவங்களுக்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும். வாழ்விலும் தொழிலிலும் அதுவே நிறைவு தரும்.

- வெற்றி பெறுவதற்கான தாகமும், அதை நோக்கிய லட்சிய இலக்கும் இருக்க வேண்டும். அடுத்தவர்களுக்கு எதையும் நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு உங்கள் திறமையை நிரூபித்தால் போதுமானது.

- ‘இத்தனை மணி நேரத்துக்கு மேல் வேலை பார்த்தால், நன்றாக வேலை செய்ய முடியாது’ என்று ஒரு கணக்கு சொல்வார்கள். அந்தத் திறன் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். வெற்றிகரமான நிர்வாகிகள் கடினமாகவும் ஸ்மார்ட்டாகவும் வேலை பார்ப்பார்கள். நம்மைவிடத் திறமை அதிகமுள்ள மனிதர்களுடன் போட்டி போடும்போது, நம் கடின உழைப்பால்தான் அதை ஈடுசெய்ய முடியும்.

- பணம் பெருகத் தொடங்கியதும், வீட்டு வாசலில் நான்கைந்து கார்கள், வெளிநாட்டு சுற்றுலா, ஆடம்பர வாழ்க்கை என்று மாறுவது பணக்கார வாழ்க்கை இல்லை. பணம் என்பது பரிசு அல்ல, அது ஒருவகை பொறுப்புணர்வு. அதை வைத்து தொழிலை விரிவாக்கி, இன்னும் தரமான பொருட்களைக் கொடுப்பது, இன்னும் பலருக்கு வேலை கொடுப்பது, சமூகத்துக்குப் பங்களிப்பு செய்வது என்று செயல்பட வேண்டும். பணம் அப்போதுதான் உரிய மதிப்பு பெறும்.

- பணத்துடன் சேர்த்து பணிவும் வர வேண்டும். வெற்றி வரும், போகும். ஆனால் அடுத்தவர்களை மதிப்பதும், மரியாதை கொடுப்பதும் மாறக்கூடாது. எல்லோரது சுயமரியாதையையும் மதிக்க வேண்டும். யாரையும் தகுதிக்குறைவாக நடத்தக்கூடாது.



# மேன்மையாக்கும் இனிய மாற்றங்கள்!

வீட்டில், உறவுகள் மத்தியில், நண்பர்கள் வட்டத்தில், அலுவலகத்தில், தொழில் செய்யும் இடத்தில், வியாபாரம் நடத்தும் பகுதியில் என்று எல்லா இடங்களிலுமே பலரும் தங்களை மேன்மையான மனிதர்களாகக் காட்டவே விரும்புகிறார்கள். அதற்கு ஏற்றபடி வாழ்க்கையை மாற்றிக்கொள்வது எப்படி?

❖ நீங்கள் யார் என்பதை உணர்த்துவது உங்கள் முகம் அல்ல, நாக்குதான். பேசும் வார்த்தைகளில் கவனமாக இருங்கள். வார்த்தைகள் அன்பையும் வெளிப்படுத்தும்; கோபத்தையும் சொல்லும். வார்த்தைகள் ஒருவரை உயர்த்தவும் செய்யும், அவமானப்படுத்தவும் செய்யும். எதையும் பேசுவதற்கு முன்பு நன்கு யோசியுங்கள்.

❖ மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். அவை நேர்மறையான மாற்றங்களா என்று மட்டும் பாருங்கள். தினம் தினம் மாறிக்கொண்டே இருக்கும் உலகில், 'நான் அப்படியேதான் இருப்பேன்' என்று வறட்டுப் பிடிவாதம் பிடித்தால் காணாமல் போய்விடுவீர்கள்.

❖ அச்சமாக இருந்தாலும், புதிய விஷயங்களை முயற்சி செய்யத் தயங்காதீர்கள். அதுதான் உங்களை கற்றுக்கொள்ளும் மாணவனாக எப்போதும் வைத்திருக்கும். புதிய அனுபவங்களைப் பெறுவது மனசையும் இளமையாக்கும்.

❖ நன்றியுணர்வை எப்போதும் இழந்துவிடாதீர்கள். ஒவ்வொரு தருணத்திலும் உதவிகள் செய்பவர்களை நன்றியுடன் நினைவுகூர்வதும், மனதிலிருந்து நன்றி சொல்வதும் உங்களை மேன்மையாக்கும். நன்றியுணர்வு இருக்கும் மனதில் பொறாமை இருக்காது. அவர்களுக்கு இதயநோய் அபாயமும் குறைகிறதாம்.

❖ நன்மைக்கும் தீமைக்குமான எல்லைக்கோடு அறிந்து வைத்திருங்கள். எப்போதும் சரியான செயல்களையே செய்யுங்கள். யாரும் பார்க்காத இடங்களில்கூட, தவறான செயல்கள் எதையும் செய்துவிடாதீர்கள்.

❖ ஒவ்வொருவருக்கும் சில திறன்கள் மற்றும் தனித்தன்மைகள் பரிசு போல வந்து வாய்த்திருக்கும். அவற்றை வீணடிக்காதீர்கள். அந்தத் திறமைகளை மெருகேற்றிக்கொள்ளுங்கள். அடுத்தவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள்.

❖ அதே சமயத்தில் உங்கள் பலவீனம் எது என்று கண்டறியுங்கள். அதைச் சரி செய்துகொள்வது நல்லது. இதற்காக யாருடைய உதவியைக் கேட்கவும் தயங்காதீர்கள். பலவீனங்கள் குறைவாக இருப்பதே உங்கள் வளர்ச்சிக்கு உதவும்.


❖ உதவிகள் செய்வதில் ஹீரோ போல இருங்கள். சண்டைகள் செய்வது ஹீரோயிஸம் இல்லை. முதியவர் ஒருவர் சிரமத்துடன் தூக்கிவரும் பெட்டியை வாங்கிக் கொஞ்ச தூரம் எடுத்து வருவது, எதிரே வரும் ஒருவருக்காகக் கதவைத் திறந்துவிடுவது, கஷ்டத்தில் இருக்கும் ஒரு நண்பனின் பிரச்னைகளைக் கேட்டுத் தீர்வும் ஆறுதலும் சொல்வது... இதெல்லாம்தான் ஹீரோயிஸம்.

❖ நமக்கு ஏதோ பிரச்னை என்றாலோ, நாம் ஏதாவது சாதனைகள் செய்தாலோ, அதையெல்லாம் அடுத்தவர்கள் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்று நினைக்கிறோம். இதே நினைப்பு எல்லோருக்கும் இருக்கும்தானே! அடுத்தவர்கள் சொல்வதைக் கேளுங்கள். துன்பத்துக்கு ஆறுதலும், சாதனைக்கு வாழ்த்தும் சொல்லுங்கள்.

❖ எதிலும் ஆர்வம் காட்டும் மனிதராக இருங்கள். ஒருவர் உங்களிடம் பேசும்போது, போனைப் பார்த்தபடி சுவாரசியம் இல்லாமல் அதைக் கேட்பது நாகரிகம் இல்லை. முகத்தை இனிமையாக வைத்துக்கொண்டு உரையாடுங்கள், பேசுவதைக் கேளுங்கள். பதற்றமும் பரபரப்பும் காட்டாமல் பொறுமையாகக் கேளுங்கள். அமைதியான மனத்தில்தான் நல்ல முடிவுகள் பிறக்கும். ●



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Feel like a Champion. Inside!
There is a champion within you. Unleash your true potential with lasting comfort & confidence from within, with Ramraj Banians.
Inners for Winners
RAMRAJ
BANIANS • BRIEFS • TRUNKS
Shreyas Iyer - Cricketer
SCAN QR CODE FOR STORE LOCATION
SUKRA Super Fine Banians
ROMEX Supreme Banians
RISE-UP Premium Banians
ARCHERY Gym Vest
COMPACT Flexible Rib Vest
ACOSTE BANIANS | BRIEF | TRUNKS
Available @ Ramraj Showrooms & All Leading Textile Shops | Shop Online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-10-2023. Posted at Tirupur BPC on 5th of every month.

